1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 46-ம் இலக்கம் |
|---|---|---|

## சுதேச வர்த்தமானம்

### கிளிநோச்சியில் பெருமழை

கிளிநொச்சிப்பகுதியிலே சென்ற வியாழக்கிழமை இரவுமுதல் பெருமழைபெய்தமையால் அங்குள்ள புதுமுறிப்புக்குளம் இரண்டிடங்களிலே உடைத்திருக்கின்றது. இந்தக்குளம் சமீபத்தில்தான் திருத்தியமைக்கப்பட்டது. ஆயினும், பலவிடங்களால் தண்ணீர்வெளியேறுகின்றது. பாலத்தை உடனடியாகப் பழுதுபார்க்காவிடின் ஏறக்குறைய 250 ஏக்கர் நெல்வயல் பாழாய்ப்போய்விடுமென்று சொல்லப்படுகிறது.

### கடற்கோந்தளிப்பும் கஷ்டநிலையும்

வெருவலை, அழுத்துகாமம், பையகாலை, கட்டுக்குருந்தைப் பகுதிகளைச் சேர்ந்த கடற்தொழிலாளர் தற்போது பெருங் கஷ்டப்படுகிறார்கள். அதற்குக் காரணம், புரட்டாசித்தொடக்கத்திலே ஆரம்பமாகவேண்டிய மீன்பிடிகாலம் கடல்அமைதியுறாது இன்னுமேகொந்தளித்துக்கொண்டிருப்பதால் கடற்தொழில் இன்னுமே தொடக்கப்படாதிருப்பதேயாகும். அதனால் அப்பகுதிகளைச்சேர்ந்த சுமார் 20,000 கடற்தொழிலாளரும், இவர்களில் தங்கியிருப்பவர்களும் பெருங் கஷ்டமுறுகின்றார்கள்.

### அரிசிவிற்பனவுக் கட்டுப்பாடு

வருகிற மார்கழிமாதம் 1-ந்திகதி தொடக்கம் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், அதிகாரம்பெற்ற வியாபாரிகளும்மாத்திரமே பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்த அரிசியைவிற்க அனுமதிக்கப்படுவர். அன்றுமுதல் இறக்குமதிசெய்த அரிசியை விற்பனைசெய்ய அல்லது ஓர்இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குக்கொண்டு செல்ல, அல்லதுகையிருப்பில் வைத்திருக்கக் கண்டுபிடிக்கப்படும். அதிகாரம்பெறாத தனிப்பட்டவியாபாரிகள் மேல் வழக்குத்தொடரப்படும். இந்த நடவடிக்கைக்குக்காரணம், அரிசிக்கூப்பன்கள்கொண்டு பெருமளவில் களவாக அரிசிவியாபாரம் நடத்தப்படுவதேயாகும். அதாவது, பொதுசனங்களால் வாங்கப்படாதகூப்பன்அரிசியைத்தனிப்பட்டவியாபாரிகள் ஒருபடி40சதமாகக் கட்டுப்பாட்டுவிலைகொடுத்துவாங்கித் 90சதமாகவிற்று ஒருபடிஅரிசிக்கு 50 சதவீதம்கொள்ளைலாபம் அடித்துவருவதாகக் கண்டறியப்பட்டிருப்பதேயாகும். தற்போது தனிப்பட்டவியாபாரிகள் இறக்குமதிசெய்த மில்சாட் அரிசியைப்படிஒன்று 90சதவிகிதமும், சம்பாஅரிசியைப் படிஒன்று 1ரூபா முதல் 1ரூபா30சதவிகிதமும் விற்றுவருகின்றார்கள். ஆனால், யாழ்ப்பாணக்குடாநாடு நீங்கலாக ஏனையபகுதிகளில் உள்நாட்டுஅரிசியை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ஏற்றிச் செல்லக் கட்டுப்பாடில்லை.

### சீமேந்துக் கட்டுப்பாட்டுவிலை

தற்போது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைப்படி இங்கிலிஷ் சிமெந்துப்பை ஒன்றுவிலை 10 ரூபா 75 சதம். மற்றெல்லாவகைச் சிமெந்துகளினதும் விலை பை ஒன்று 10 ரூபா 25 சதம். ஆனால், வியாபாரிகள் பிறநாடுகளிலிருந்து இனிமேல்தருவிக்கும் சிமெந்து கட்டுப்பாட்டுவிலையிலும் கூடியசெலவுள்ளதாய் இருக்குமானால் அதன் கட்டுப்பாட்டுவிலையைச் சற்றேகூட்டுவதாக வர்த்தகமந்திரியார் வாக்களித்திருப்பதாகத் தெரியவருகிறது.

### உதவிக்குப்போன கங்காணி

யற்றியாந்தோட்டையிலே எதறபோலாத் தோட்டத்தைச்சேர்ந்த சிவானு கங்காணியும், தெய்வானைஎனும் பெண்ணும் சென்றசனிக்கிழமை வெள்ளம் பெருக்கெடுத்தோடிய நீரோடைஒன்றைக் கடக்கமுயன்றபோது அதில் மூழ்கி இறந்துபோயினர். சிவானுகங்காணி வயலிலிருந்து அதிகமாகப் பெண்களைக் கொண்ட சிலதொழிலாளிகளுடன் வீட்டுக்குத்திரும்புகையில் வெள்ளம் பெருக்கெடுத்தோடிய அந்த நீரோடையைக்கடக்க அவர்களுக்கு உதவிசெய்தார். கடைசி ஆளான தெய்வானைக்கு உதவிசெய்யும்போது அவள் சறுக்கிவிழுந்துவிட்டாள். அவளைமீட்கச் சிவானு சென்றபோது இருவரும் நீரோடையில்மூழ்கி இறந்துபோனார்கள்.

### கல்விமந்திரி பாராட்டுகின்றார்

பாணந்துறையைச்சேர்ந்த அருகொடைக் கத்தோலிக்க கலவன்பாடசாலைப் பெற்றோர்-ஆசிரியர்சங்கத்தின் வருடாந்தவிழா சென்ற 16-ந்திகதி நடந்தேறியது. அதற்குக் கல்விமந்திரி திரு. டபிள்யு. தஹநாயகா தலைமைவகித்துப் பேசியபோது: "கத்தோலிக்க ஸ்தாபனங்களால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளைப்பாராட்டி நான் ஒருவிஷயம் கூறவேண்டும்; அதாவது, அப்பாடசாலைகள் எத்தகையதலையிடியையும் எனக்குக்கொடுப்பதில்லை; ஏனெனில், அவற்றின்நிர்வாகிகள் அவைகள் நேர்மையாகவும், திறமையாகவும் நடைபெறுவதற்கான பொறுப்பை எடுத்துத் தங்கள்முயற்சியில் எப்போதும் வெற்றியடைந்துள்ளார்கள்" எனக் கூறலாயினர். கல்விமந்திரி என்றமட்டிலே ஏதோஒருநாள் சிங்களஆசிரியருக்கு மிகவுமஉயர்ந்தஸ்தானம்அருளுவதே எனதுமுயற்சியாயிருக்கும்; ஏனெனில், இந்தஆசிரியரின் சேமவாழ்வு முந்திய யு. என். பி. ஆட்சிகாலத்தில் பராகண்டிதம் செய்யப்பட்டிருக்கிறது என்றுகூறி அதற்கும் ஓர் மாலைசூட்டலாயினர்.

### அரசாங்கமும் சமயஸ்தாபனங்களும்

"இந்நாட்டிலுள்ள சகலசமயஸ்தாபனங்களும் சுதந்திரமாகச் செயலாற்றுமாறு அவற்றிற்குப் பூரணசுதந்திரம் வழங்குவதுதான் அரசாங்கத்தின்கொள்கை; அரசாங்கம் எந்தஒரு சமயத்துக்கும் இடைஞ்சல் உண்டுபண்ணுதிருப்பது மட்டுமல்ல, கோவில்களைக் கட்டியெழுப்ப நிலம்வழங்குதல் போன்ற பலவழிகளாலும் சமயஸ்தாபனங்களுக்கு ஊக்கம் அளித்துவரும்" என்று சென்றசனிவாரம் கொழும்பிலே பாலத்துறை அர்ச். சூசையப்பர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசியபோது நீதிமந்திரி திரு. எம். டபிள்யு. எச். டி சில்வா கூறியிருக்கின்றார்.

### யாழ்ப்பாண-மலையாளப் புகையிலை

யாழ்ப்பாண-மலையாளப் புகையிலை விற்பனவுச்சங்கம் இனிமேல் இந்தியாவுக்குப் புகையிலைஏற்றுமதிசெய்ய முடியாதநிலைமையில் இருக்கின்றது; அதனால் யாழ்ப்பாண-மலையாளப் புகையிலை செய்கைபண்ணும் சுமார் ஐயாயிரம் தோட்டக்காரரையும் அப்புகையிலையைச்செய்கைபண்ணுதிருக்கும்படி அது கேட்டிருக்கிறது. இந்தச்சங்கம் வருடந்தோறும் 15லட்சம்ரூபா பெறுமதியுள்ள புகையிலையை இங்கே விலைக்கு வாங்கி மலையாளத்துக்கு ஏற்றுமதி செய்துவந்தது. அங்கே இது திருவாங்கூரில் பாவிக்கப்படுகிறது. இதைவிடத் தனிப்பட்ட வியாபாரிகளும் 5லட்சம் ரூபாவுக்குமேல் பெறுமதியான புகையிலையை மலையாளத்துக்கு ஏற்றுமதி செய்துவந்தார்கள். அதனால், இனிமேல் வருடந்தோறும் 20லட்சம் ரூபாவுக்கு மேல் வருமானநஷ்டம் உண்டாகும். வருகிறஆவணிமாதம் முடிவாகவிருக்கும் இந்திய-இலங்கைப் புகையிலை ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க அரசாங்கம் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் அடுத்த வருடம் மலையாளத்துக்குப் புகையிலை ஏற்றுமதிசெய்யலாமென்ற நம்பிக்கை இல்லை. இந்தஒப்பந்தத்தைப் புதுப்பிக்குமாறு சங்கம் உணவு-கமத்தொழில் மந்திரிகாரியாலயத்துக்கும், வர்த்தகமந்திரி காரியாலயத்திற்கும் வேண்டுகோள் செய்திருக்கின்றது.

### மந்திரிமாரிடையே பிணக்கு

கிராமஅபிவிர்த்தி இயக்கத்தை எதிர்த்து உணவு-கமத்தொழில் மந்திரியான திரு. பிலிப் குணவர்த்தன நடத்திவருகிறபோராட்டத்தில் இனிமேலும் அழுங்குப்பிடியாய் நிற்பாரானல் உள்நாட்டுமந்திரியான திரு. ஏ. பி. ஜயசூரிய தனது மந்திரிபதவியையே இராசிநாமாச் செய்துவிடுவார்போல் தோற்றுவதாகத் தெரியவருகிறது. உணவு-கமத்தொழில் மந்திரியார் தனது சொந்தக்கருமத்தையே கவனித்துக்கொண்டிருக்குமாறு செய்துவிடும்படியாக உள்நாட்டுமந்திரி பிரதமருக்குச் சொல்லியிருக்கிறாரென்றும் அறியக்கிடக்கிறது. கிராம அபிவிர்த்தி இயக்கம் உள்நாட்டு மந்திரியின் அதிகாரஎல்லைக்குள் அடங்கியது. அவ்வாறாக உணவு-கமத்தொழில்மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன இந்தஇயக்கத்தைத் திரும்பத்திரும்பப் பகிரங்கமாகக் கண்டனஞ்செய்துவருகிறார். இந்தக் கண்டனமானது உள்நாட்டுமந்திரியின் அரசியல் வாழ்க்கையையே குழிதோண்டிப் புதைத்துவிடும்போல் இருக்கிறது.

### ஆசிரியரின் அரியபரிசோதனை

வதிரி, திருஇருதயகல்லூரி ஆசிரியர்களில்ஒருவரான திரு. அந்தோனிப்பிள்ளை இராசையா அவர்கள் ஆசிரியத் தொண்டாற்றியபோதிலும் நெல்வேளாண்மையிலே மிகஆர்வமுடையவர். இவர் ஆறு, ஏழுவருடங்களாகக் களைப்புல்காரணமாகத்தம்முடையநெல்வயல்களால்அதிக நஷ்டம்அடைந்திருந்தார். அவ்வாறாக இருவருடங்களுக்குமுன் ஒருமுறை யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவருடன் இவர் சம்பாஷித்தபோது களைப்புல்பற்றியும் பேசநேர்ந்தது. அப்போது ஆண்டவர்அவர்கள் புற்களை அழிக்கக்கூடிய "வீட்கில்லர்" (Weed Killer) என்ற ஒருமருந்து இருக்கிறதென்றும், அதன்மூலம் புற்களை அழிக்கலாமென்றும் ஒருஐரோப்பியதுரைமகன் தமக்குச் கூறியதாக அவரிடம் தெரிவித்தார். ஆசிரியரும் அதனை இம்முறை தேடிப்பெற்றுத் தமதுவயல்களிலே நெற்பயிர்கள் ஒருமாதப் பயிர்களாயிருந்தபோது இந்த "வீட் கில்ல"ரைத் தெளித்துவிட்டார். இதன்விளைவாக அவரதுவயல்களிலுள்ளமுடிச்சுக்கோரை, சந்தனக்கோரை, மட்டைக்கோரை, தோட்டக்கோரைமுதலிய கோரை வகைகளும், மற்றும் சிறியஇனத்தைச் சேர்ந்த களைப்புற்களும் அழிந்திருக்கக் கண்டார். ஆனால், நெற்பயிர்களுக்கு எவ்விதசேதமும் ஏற்படவில்லை. நெற்பயிர்போன்றபுல்லாகிய கோழிச்சூடன் என்ற சாதிப்புல்மாத்திரம் அழியவில்லை.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திமா கேடய, வெள்ளிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்

கத்தோலிக்க கல்லூரிகளுக்கும், கழகங்களுக்குமிடையிலே ஒற்றுமையையும், அன்பையும், ஊக்கத்தையும் உண்டு பண்ணுமுகமாகத் தற்போது நடத்தப்பெற்றுவருகின்ற பத்திமாகேடய — வெள்ளிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த இருவருடங்களைக் காட்டிலும் இவ்வருடம் அதிகம் உற்சாகமாக நடந்துவருகின்றன. போட்டிகளிலே ஈடுபட்டுள்ள கோஷ்டிகள் ஊக்கமாக விளையாடித் தத்தம் கல்லூரிகள், கழகங்களின் புகழைப் பிரசித்தப்படுத்தியுள்ளன. இன்றுவரை நடந்து முடிந்த போட்டிகளின் விபரம் வருமாறு:

16-10-1956 — கொழும்புத்துறை, சஞ்சூசையப்பர் சாதனகழக கோஷ்டிக்கும், சென்ஜேம்ஸ் கழககோஷ்டிக்குமிடையில் நடந்தபோட்டியிலே சஞ்சூசையப்பர் சாதன கழககோஷ்டி 3—0 வெற்றிகளால் சென்ஜேம்ஸ்கழக கோஷ்டியைத் தோற்கடித்தது.

19-10-56 — சம்பத்திரிசியார் கல்லூரி விளையாட்டுமைதானத்திலே ஊர்காவற்றுறை, அர்ச். அந்தோனியார் கல்லூரிக் கோஷ்டிக்கும், சம்பத்திரிசியார் கல்லூரிக்கோஷ்டிக்குமிடையே நடந்தபோட்டியில் சம்பத்திரிசியார்கல்லூரி முதற்கோஷ்டி அர்ச். அந்தோனியார்கல்லூரி முதற்கோஷ்டியை 3—0 வெற்றிகளால் தோற்கடித்தது. அர்ச். அந்தோனியார் கல்லூரியின் 2-வது கோஷ்டி போட்டியிடாது வெற்றியைச் சம்பத்திரிசியார் கல்லூரிக்கோஷ்டிக்கே ஈந்துவிட்டது.

1-11-56 — அனுராதபுரம், சஞ்சூசையப்பர்கல்லூரி விளையாட்டுமைதானத்திலே மன்னார், சென்சேவியர் கல்லூரிக்கோஷ்டிக்கும் அனுராதபுரம், சஞ்சூசையப்பர் கல்லூரிக் கோஷ்டிக்குமிடையே நடந்தபோட்டியில் சென்சேவியர்கல்லூரியின் முதலாவது கோஷ்டி சஞ்சூசையப்பர் கல்லூரி முதலாவதுகோஷ்டியை 2—0 வெற்றிகளால் தோற்கடித்தது. இருகல்லூரிகளினதும் 2-வதுகோஷ்டிகள் நிகழ்த்தியபோட்டியில் அனுராதபுரம், சஞ்சூசையப்பர் கல்லூரிக்கோஷ்டி 2—0 வெற்றிகளால் சென்சேவியர் கல்லூரிக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

3-11-56 — 'சேக்கிறற் ஹாட்' கல்லூரி விளையாட்டுமைதானத்திலே அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரிக் கோஷ்டிக்கும், 'சேக்கிறற் ஹாட்' கல்லூரிக்கோஷ்டிக்குமிடையே நடந்தபோட்டியில் 'சேக்கிறற் ஹாட்' கல்லூரியின் 2-வதுகோஷ்டி அர்ச். ஹென்றிக்கப்பர்கல்லூரியின் 2-வது கோஷ்டியை 2—1 வெற்றிகளால் தோற்கடித்தது. அவற்றின் முதலாவது கோஷ்டிகள் 1—1 வெற்றிகள் ஈட்டியமையால் வெற்றிதோல்வியின்றிப் போட்டிமுடிந்தது. மீண்டும் இருகல்லூரிகளினதும் முதலாவதுகோஷ்டிகள் 7-11-56—புதன்கிழமை அர்ச். ஹென்றிக்கப்பர்கல்லூரி விளையாட்டுமைதானத்தில் போட்டியிட்டன. இதில் அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரிக்கோஷ்டி 'சேக்கிறற் ஹாட்' கல்லூரிக்கோஷ்டியை 3—0 வெற்றிகளால் தோற்கடித்தது.

10-11-56 — அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் சென்சேவியர்கல்லூரியின் முதலாவது கோஷ்டிக்கும், அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரியின் முதலாவதுகோஷ்டிக்குமிடையே நடந்தபோட்டியில் அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரிக் கோஷ்டி சென்சேவியர் கல்லூரிக்கோஷ்டியை 3—0 வெற்றிகளால் தோற்கடித்தது.

**பத்திமாகேடய இறுதிப்போட்டி:** சென்றசனிக்கிழமை பிற்பகல் சம்பத்திரிசியார் கல்லூரியின் முதலாவதுகோஷ்டிக்கும், இளவாலை அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரியின் முதலாவதுகோஷ்டிக்குமிடையே நடைபெறவிருந்த பாத்திமாகேடய உதைபந்தாட்டங்களின் இறுதிப்போட்டி மழைகாரணமாக நடைபெறவில்லை.

## முடிவடைந்த போட்டிகளின் விபரம்

| | வெற்றிபெற்றவை | வெற்றிகள் | எதிர்த்துப்போட்டியிட்டவை |
|---|---|---|---|
| A. | சஞ்சூசையப்பர் சாதனகழகம் (வெள்ளிக்கிண்ணம்) | 3—0 | சென்ஜேம்ஸ் கழகம் |
| B. | சம்பத்திரிசியார் கல்லூரி (கேடயம்–வெள்ளிக்கிண்ணம்) | 3—0 | அர்ச். அந்தோனியார் கல்லூரி (விளையாடப்படவில்லை) |
| C. | சென்சேவியர் கல்லூரி (கேடயம்) | 2—0 | சஞ்சூசையப்பர் கல்லூரி |
| D. | சஞ்சூசையப்பர் கல்லூரி (வெள்ளிக்கிண்ணம்). | 2—1 | சென்சேவியர் கல்லூரி |
| E. | அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரி (கேடயம்) | 3—0 | சேக்கிறற்ஹாட் கல்லூரி |
| F. | சேக்கிறற்ஹாட் கல்லூரி (வெள்ளிக்கிண்ணம்) | 2—1 | அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரி |
| G. | அர்ச். ஹென்றிக்கப்பர் கல்லூரி (கேடயம்) | 3—0 | சென்சேவியர் கல்லூரி |
| H. | சஞ்சூசையப்பர் கல்லூரி (வெள்ளிக்கிண்ணம்) | 5—3 | சேக்கிறற்ஹாட் கல்லூரி |

**L. A. Singarayer, O. M. I.**
(Organiser)

# விசர் நாய் கடிப்பதன் ஆபத்தும், பரிகாரமும்

உன்மத்தரோகம் மரணத்துக்கேதுவான நோயாகும். இது சாதாரணமாக நாய்களையும், ஓர் அளவுக்கு நரி, மாடு, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை ஆகிய மிருகங்களையும் பாதிக்கின்றது. வெப்பக்குருதியுள்ள எல்லா மிருகங்களும் இதனால் தாக்கப்படுகின்றன.

மனிதன் விசர்நாயினால் கடிக்கப்படுவதினாலும், விசர்கொண்ட மிருகத்தின் உமிழ்நீர் அவனதுஉடலிலுள்ள காயங்களிற்படுவதினாலும் இந்நோயாற்பாதிக்கப்படுகின்றான். உன்மத்தரோகத்தை உண்டாக்கும் விஷஉயிரானது விசர்கொண்டமிருகத்தின் உமிழ்நீர் அல்லது எச்சில்மூலம் பரப்பப்படுகின்றது.

பொதுவாக 1—2 மாதங்களில் இந்நோய் வெளிப்படுமாயினும் மனிதனில் தொற்றுண்ட 14-ம் நாட்தொடக்கம் ஓராண்டுவரை மறைந்திருந்து வெளிப்படவும்கூடும்.

முகத்தில் அல்லது கழுத்தில் விசர் நாய் கடிக்குமாயின் மிகக்கெதியில் விசர்உண்டாகும்.

### விசர்நாயின் நாட்டம்

நாயின் விசர் இருவகையானது: உக்கிரவிசர், வியாகுலவிசர்.

உக்கிரவிசர்— நாய்எளிதிற் கோபங்கொள்ளும். சடுதியாக நடுக்கமடையும். சிறு சத்தந்தானும் அதனை வெருட்சியடையச்செய்யும்.

ஏதாவதொரு பொருளைக் கடிப்பதாகப் பாவனைசெய்யும். கந்தை, வைக்கோல், மரச்சிராய் முதலியவற்றைச் சப்பிவிழுங்கும். தன்உடலைத்தானுங் கடிக்கும்.

சுவாசிக்கக் கஷ்டப்படும். உணவை வெறுக்கும்.

அதன்கண்கள் சிவக்கும். கண்மணிகள் சமமற்ற நிலைமையடையும்.

அது கம்மியகுரலில் ஓலமிடுவதும், விட்டுவிட்டுச் சத்தங்குறைந்த அளவிற் கனைப்பதுபோலக் குலைப்பதுமாக இருக்கும்.

விசர் உச்சநிலையடைந்ததும் துர்க்குணமடைந்து கண்ணிற்தோன்றும் எந்தஉயிரையும் தாக்கும்.

இந்நிலைமையில் உணவை விழுங்குதல் வேதனையாக இருக்குமாகையால், அது உணவையும், தண்ணீரையும் உட்கொள்ளமாட்டாது.

அதன் வாயிலிருந்து உமிழ்நீர் தொடர்ந்துவடியும்.

விசர்தோன்றி ஐந்துநாட்களில் அதற்குப் பாரிசவாதம் உண்டாகும் அதன்பின் நாய்இறக்கும்.

வியாகுலவிசர் — கோபக்குறிகள் தோன்றுவதில்லை. கீழ்அலகு பாரிசவாதத்தால் முதலிற் பாதிக்கப்படும். பின்னர் உடல்முழுமையும் பாதிக்கப்படும்.

வாய்திறந்தவண்ணம் நாய் படுத்துக்கொள்ளும். எதனையும் கடிக்க எத்தனிக்கமாட்டாது.

ஒருவாரத்தில் மரணமாகும்.

### சிகிச்சை முறை

ஒவ்வொரு நாயையும் — உங்கள் பிரிய நாயைத்தானும் விசர்நாயெனக் கருதிச் சிகிச்சைசெய்தல் வேண்டும். நாயினாற் கடிபட்டவுடன் டக்றரிடம் செல்லவேண்டும். அன்றேல் பின்வருமாறு நடவடிக்கை எடுத்துக்கொள்ளல் நலம்

விஷம் உடலில் மேலேஏறுவண்ணம் காயத்துக்குச் சிறிது மேற்புறத்தில் ஒருபட்டி அல்லது கச்சையால் இறுக்கிக் கட்டுதல்வேண்டும்.

காயத்தைச் சிறிதுவிரித்துச் சவர்க்காரம் உபயோகித்து, தண்ணீராற் கழுவுதல்வேண்டும்.

காயத்தின்ஈரத்தைத் துடைத்து, கரியகஅமிலத்தால் புண்ணைத் தகித்தல்வேண்டும். ஆழமான புண்ணைத் துப்பரவாக்குதற்குச் சிறிது பஞ்சு மாட்டப்பட்ட இரணசிகிச்சைச் சலாகையைப் பிரயோகிக்கலாம்.

மேலதிகமாகப் பூசப்பட்ட கரியகஅமிலத்தை நடுநிலைத் தன்மையினதாக்கச் சுத்தநறவம், வடிமதுச்சாரம், மாத்தைலங்கலந்த மதுச்சாரம் ஆகியவற்றுளொன்றைக் காயத்தின் மேல் பூசுதல். இதனால் தசைக்கு அநாவசிய சேதமேற்படாது

அண்டை டக்றரிடமிருந்து விசர்த்தடைஊசி போடுவித்தல் வேண்டும். இதனை உடனடியாக ஆரம்பித்தால் விசர்தொடங்காமல்பூரணவிமோசனம் உண்டாகும். எம்மட்டுக் கஷ்டப்பட்டாயினும் கிரமமாக ஊசிபோடல் விசர்த்தடுப்புக்கு இன்றியமையாதது. விசர்நாய் உங்களைக்கடித்தால், உங்கள் உயிர் பிழைப்பதற்கு ஊசிபோடுவித்தல்தான் ஒரேயொருவழி.

உங்கள் நாய்க்கு மாற்றுப்புகுத்துவித்துப் பிரியமுள்ள உங்கள்நாயையும், உங்களையும், மற்றையோரையும் காப்பாற்றுங்கள். பொதுசன சௌக்கியப் பராமரிப்புப் பொறுப்பின்பிரகாரம் மேற்கூறியபடி செய்துகொள்ளுதல் ஒருபொதுநலக் கடமையுமாகும்.

உங்கள்வட்டார அரசாங்க மிருகவைத்தியர் உங்கள்நாய்களுக்கு இலவசமாக மாற்றுப்புகுத்தக் கடமைப்பட்டவராவர்.

---

### நீர்கொழும்பு நகரசபை

நீர்கொழும்பு முனிசிப்பல்சபைத் தேர்தல் சென்றசனிக்கிழமை நடந்தேறியது. அதன் பன்னிருவட்டாரங்களுக்கும் அபேட்சகர்களாய் 28 பேர் போட்டியிட்டார்கள். பன்னிருவட்டாரங்களிலும் பத்துவட்டாரங்களுக்குச் சுயேச்சை அபேட்சகர்களே தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார்கள். 2-ம்வட்டாரத்தில் யு. என். பி. அபேட்சகரும், 7-ம்வட்டாரத்தில் நவலங்காசமசமாசக் கட்சி அபேட்சகரும் வெற்றிபெற்றுள்ளனர். 10-ம்வட்டாரத்தில் நவலங்கா சமசமாசகட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட நீர்கொழும்பு எம். பி. டக்றர்ஹெக்றர் பர்ணண்டோ ஓர் சுயேச்சைஅபேட்சகரால் தோற்கடிக்கப்பட்டார். 8-ம்வட்டாரத்துக்கு ஓர் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்ட திருமதி ஹெக்றர் பர்ணண்டோ மற்றோர் சுயேச்சைஅபேட்சகரான தற்போதையமேயராலே 600 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டார். 1-ம்வட்டாரத்திலே தற்போதைய உதவி மேயர் திரு. கில்பேர்ட் பெர்ணண்டோ ஓர்சுயேச்சை அபேட்சகரால் தோற்கடிக்கப்பட்டார். 3-ம், 4-ம்வட்டார அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரியப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையடைந்த போலிஷ் கருதினால்

போலாந்தின்திருச்சபை மேலதிகாரியான கருதினால் விசின்ஸ்கி ஆண்டவர் மூன்றுவருட சிறைவாசத்தின்பின் சமீபத்திலே விடுதலையடைந்து, ஓர்வீரர்திலகம்போல் வார்சோநகருக்குத் திரும்பியிருக்கிறார். இவர் விடுதலைசெய்யப்பெற்றமையானது போலாந்திற்குச் சமயசுதந்திரம் அருளும்விஷயமாய் எடுக்கப்பட்டுள்ள ஓர்நிச்சயமான முதல்நடவடிக்கையாகும். ஆனால், இதற்கெல்லாம் நெடுநாள்எடுக்கும்; கருதினால் ஆண்டவர் விடுதலைசெய்யப்பெற்றமையானது யாதாமோர்அர்த்தத்தைக் கொண்டிருக்க வேண்டுமானால் போலிஷ்அரசாங்கம் 1953-ம்ஆண்டு செய்தசட்டத்தை அழிக்கவேண்டும். ஏனெனில், போலாந்திலே மேற்றிராணிமார்களின் நியமனம்உட்படத் திருச்சபைக்கருமங்கள் எல்லாவற்றிலும் தலையிட அரசாங்கத்துக்கு உரிமையுண்டு. இந்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தகாரணமாகவே கருதினால் விசின்ஸ்கி ஆண்டவர் முடிவில் கைதுசெய்யப்பெற்றார். இன்னும் புதிய போலிஷ்அரசாங்கம் முன்னர்கைதுசெய்யப்பெற்ற அன்றேல் அகற்றிவிட்ட ஆயிரக்கணக்கான மேற்றிராணிமார், குருமாரையும் விடுதலைசெய்வதற்கான நடவடிக்கையையும் எடுக்க வேண்டும். கருதினால்ஆண்டவர் கைதுசெய்யப்பெற்றபோது, 24 மேற்றிராணிமாரும், 6,000குருமாரும் சிறைவைக்கப்பட்டிருந்தார்களென மதிப்பிடப்படலாயிற்று. இந்தக்கருமங்கள் தீர்க்கப்பட்டதும் சமயகல்விபற்றிய அடிப்படையானவிஷயத்தில் உடன்பாடு ஏற்படவேண்டியிருக்கிறது. போலாந்திலே திருச்சபையின் எதிர்காலந்தான் நாட்டின் எதிர்காலமுமாகும்; போலாந்தின் இன்றையதலைவரான திரு. கோமுல்கா கம்யூனிஸ்தர். ஆனால், பிரதமஅதிகாரம் சிலரின் வசத்திலுள்ளசர்வதேசகம்யூனிஸ்தஅரசாங்கத்தினால் பெரிதும் உபாதிக்கப்பட்டு நல்லபாடம் படித்தவர். சுதந்திரவேட்கை கொண்டுள்ள போலிஷ்மக்களாலே இவர் அதிகாரபதவிக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றார். போலாந்திலே மீண்டும்திருச்சபை தனதுசுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளாவிடில், இவரின்ஆட்சியும் தேசியஐக்கியத்துக்கும், சுதந்திரத்துக்கும் ஆவசியகம்வேண்டியிருக்கும்கத்தோலிக்க ஆதரவை இழந்துபோகவேண்டி வரும். இவரின்அரசாங்கம் போலிஷ்மக்களுக்குத் தேசியசுதந்திரமும், அரசியற்சுதந்திரமும் அளிப்பதாகவும், தான்அபகரித்துக்கொண்ட திருச்சபைச் சொத்துகளையெல்லாம் திரும்பக் கையளிப்பதாகவும் வாக்குறுதி அளித்திருக்கிறது. கருதினால் விசின்ஸ்கிஆண்டவர் விடுதலை செய்யப் பெற்றமையாலே போலாந்திலே திருச்சபை தனது தலைவரைத் திரும்பவும் கண்டடைந்துள்ளது.

---

### ஆஸ்திரியாவும் கம்யூனிஸமும்

"சோவியற் ஆக்கிரமிப்புப்படைகள் இற்றைக்கு ஓர்ஆண்டின்முன்னே ஆஸ்திரியாவைவிட்டு வெளியேறியதுமுதல் அந்நாட்டிலேகம்யூனிஸ்தர்களின்தொகை படிப்படியாகக் குறைந்துபோய் விட்டது; கம்யூனிஸ்தயுவர் குழாம் பதமையாக, நிச்சயமான சாசாகின்றது" என்று வியென்னா நக்ர கோனிக்அதிமேற்றிராணியார் ரோமாபுரியில் கூறியிருக்கின்றார். ஆஸ்திரியாவிலே கம்யூனிஸம் எந்தவிதமான சித்தியையும் ஒருபோதுமே ஈட்டிக்கொள்ளவில்லை; கம்யூனிஸ்தஇளைஞர்கள் "சுதந்திர ஆஸ்திரியயுவர்கள்" என்றபேரிலே மறைந்துகொள்ள இப்போது பலவந்தஞ்செய்யப் பட்டிருக்கிறார்கள்என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். கம்யூனிஸ்த இளைஞர்குழுவினருக்கும், சோஷலிஸ்த இளைஞர்குழுவினருக்கும் இடையிலுள்ள வேற்றுமையை அவர் விளக்கிக்காட்டியபோது, சோஷலிஸ்தஇளைஞர்கள் சமயானுசாரத்திலும், சமயப்பிரச்சினைகளிலும் மிகுந்தகரிசனை எடுக்கிறார்களென்றும், இருகுழுவினரும் ஒருவருக்கொருவர்முழுவிரோதிகளென்றும் அவர் கூறுகின்றார்.

### பாப்பரசரின் செபவேண்டுகோள்

பரிசுத்தபாப்பரசர் சென்றஐப்பசிமாதம் 28-ந்திகதியன்று உலகமுழுவதிலுமுள்ள கத்தோலிக்க மேற்றிராணிமாருக்கு விடுத்துள்ள ஓர்அப்போஸ்தலிக்க திருமுகத்திலே போலாந்துக்கும், ஹங்கேரிக்குமாக ஓர்செபப் படையணியை ஒழுங்குபடுத்துமாறு கேட்டிருக்கின்றார். இரத்தப்பிரவாக கலகங்களாலே பிளவுபட்டுள்ள ஹங்கேரியமக்கள் நீதியை அடிப்படையாகக்கொண்ட சமாதானத்தை அடைந்துகொள்ளத்தக்கதாகச்செபஞ்செய்யுமாறு அத்திருமுகத்தின்மூலம் அவர் கேட்டுக்கொள்ளலாயினர். "மரணத்தைக்கொண்டுவரும் ஆயுதபலத்தினாலும், மக்களின் உள்ளுணர்ச்சிகளை அணைக்கமாட்டாத பலாத்காரத்தை அவர்கள் மீது பிரயோகிப்பதினாலும், மனதைச்சீரழித்து, திருச்சபையின் உரிமைகளைப்பறித்து, கிறீஸ்துவ சமுகத்தின் மனச்சாட்சியைப் பங்கப்படுத்தும் போலிக்கொள்கைகளினாலும் அமைதியை நிலைநாட்டமுடியாதென்பது எல்லாருக்கும் தெளிவாயிருக்கட்டும்" என்றும் பாப்பரசர்எச்சரித்திருக்கின்றார்.

---

# விடுவிக்கப்பெற்ற ஹங்கேரிய கருதினால்

ஹங்கேரியதிருச்சபை மேலதிகாரியான கருதினால் மின்ட்சென்ரிஆண்டவர் சென்றஐப்பசி மாதம் 30-ந்திகதி செவ்வாய்க்கிழமை அந்நாட்டின் சுதந்திரப் படைகளால் மீட்கப்படலாயினர். இப்படைகள் புடாபெஸ்ற் தலைநகரிலிருந்து 35மைல்தூரத்திலே பெல்சோப்பெற்றெனி எனுமிடத்திலுள்ள கிராமப்பெரியமாளிகையை முற்றிகையிட்டு, அதிலே சில வாரங்களாகச் சிறைவைக்கப்பட்டிருந்த கருதினால்ஆண்டவரை விடுவிக்கலாயின. அப்போதுஅவரைக் காவல்செய்திருந்த 21அரசியற்பொலிசாரும் யாதாமோர் எதிர்ப்புமின்றிஅவரைப் போக விட்டார்கள். அவைகள்அவரைச் சிறைமீட்குமாறு மாளிகையுள்பிரவேசித்தபோது பகற்போசனஞ் செய்துகொண்டிருந்த கருதினால் ஆண்டவர் வெகுவாகப் பிரமித்துப்போயினார். அன்றுதினமே அவர் பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கமக்கள் ஆவேசங் கொண்டவர்கள்போல் வாழ்த்தி ஆர்ப்பரிக்க, புடாபெஸ்ற்நகரின் தகர்ந்துஇடிகரையான வீதிகளினூடாகச் செல்லுகையில், "இற்றைக்கு ஏழுஆண்டுகளின் முன் கைவிட்டுப் போகவேண்டியிருந்த கடமைகளை நாம்திரும்பவும் கையேற்போம்" என்று அவர்களுக்குக் கூறினார்.

ஹங்கேரியமக்களின் சமயசுதந்திரஆவலே அவர்கள் கலகத்துக்கெழக் காரணமென்பது பிரசித்தமாகப் புலப்படலாயிற்று. புடாபெஸ்ற்நகரில் நிறுவிநின்ற 24 அடிஉயரமான ஸ்ராலினின்சிலை பரிகாசஞ்செய்யப்பட்டமையானது அவர்கள் சமயசுதந்திரத்துக்காகவும், அத்துடன் சோவியற்ஆட்சிக்கு ஓர்மறுப்பாகவும் செய்துள்ள ஓர்பகிரங்கசெயலாகும். கருதினால்ஆண்டவர் புடாபெஸ்ற்தலைநகருக்கு வெற்றிக் கோலமாய்த்திரும்பிய மறுநாள் இளங்குருப்பிரசாதிகள் அவரது மோதிரத்தை முத்தமிடுவதற்காக ருஷியபீரங்கிக்குண்டுகளால் இடிகரையான அந்நகரின் உடைதுண்டுகள்மத்தியிலே கண்களில் நீர்பெருக முழந்தாட்படியிட்டு நின்றார்கள். அவர்விடுதலையான செய்தி நகர்எங்கும் காட்டுத்தீபோல் பரக்கவே பாழடைந்த அவருடையமாளிகைக்கு வெளியே பெருஞ்சனக்குழாம் ஒன்றுகூடி ஆர்ப்பரித்தது. ஈனவிரக்கமற்ற சோவியற்படைகள் மிருகத்தனமாகத்தாக்கிப் புடாபெஸ்ற்நகரை அடிப்படுத்தியபோது கருதினால் ஆண்டவர் அங்குள்ள அமெரிக்கஅரசாங்கஸ்தானிகராலயத்தில் அடைக்கலம்புக வேண்டியவரானாரெனப் பிந்தியசமாச்சாரம் தெரிவிக்கலாயிற்று.

---

### நூலாசிரியரின் குருபௌத்திரர்

இங்கிலாந்திலே பிரசித்திபெற்றகத்தோலிக்க நூலாசிரியரும், எழுத்தாளருமாக விளங்கியிருந்த திரு. ஹிலேயர் பெல்லக் அவர்களின் பௌத்திரரான தொம்பிலிப் ஜெப் அவர்கள் அன்றுஞாயிற்றுக்கிழமை டவுண்சைட்டிலே குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்று, மறுநாள்திங்கட்கிழமை தமதுபாட்டனார் அநேக வருடகாலம் வசித்திருந்து காலஞ்சென்ற மனையின்சிற்றாலயத்திலே திவ்வியபூசைநிறைவேற்றினார். வண. தொம்பிலிப் ஜெப்சுவாமியாரின்தாயார் திரு. பெல்லக் அவர்களின் புதல்வியாவர். இவரும், இவர்நாயகரான திரு. றெஜினோல்ட் ஜெப்அவர்களும் அதேமனையில்தானே சஞ்சரித்து வருகின்றார்கள். இவர்களின் புதல்விகளில்ஒருவர் ஓர்கன்னியாஸ்திரியாக இருந்துவருகின்றார். இவர் இருந்துவருகின்ற கன்னிகாமடத்தில் சுவாமியார் மறுநாள்செவ்வாய்க்கிழமை திவ்வியபூசைநிறைவேற்றினார்.

### கம்யூனிஸ்த வேடதாரிகள்

ருஷிய பிரிவினைச்சபைக் குருமடங்களில் சேர்ந்துகொண்ட ருஷிய கம்யூனிஸ்த இரகசியப் பொலிஸ்ஏசன்றுகள் குருமாராக அபிஷேகஞ்செய்யப் பட்டிருக்கிறார்களென்றும், இருவர் மேற்றிராணிமாராயினரென்றும் முன்னைநாள் இரகசியப்பொலிஸ் ஏசன்றாயிருந்த லெவ்ரினன்ட் - கர்னல் யூறி ருஸ்ற்வொறவ் என்பவர் கூறுகின்றார். இவர் ஓர் அரசியற்கருவியாக ருஷிய பிரிவினைச்சபையை உபயோகிக்க ஸ்ராலின்செய்திருந்த திட்டம்பற்றி வாஷிங்ரன்நகரிலே ஐக்கியஅமெரிக்க செனற்சபையின் உள்நாட்டுப் பாதுகாப்பு உபகம்மிற்றி முன்பாகச் சாட்சியமளிக்கையில் இவ்வாறுகூறலாயினர். இந்தத் திட்டத்தின் பொறுப்பாளியாக மேஜர் - ஜெனறல் ஜி. ஜி. கார்பொவ்என்பார் இருந்துவந்தார். இவர் ருஷிய இரகசியப்பொலிஸின் "சமயகம்மிற்றித் தலைவ"ராக நியமிக்கப்பட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கார்த்திகை மாதம்

உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்கென ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.

**பொதுக்கருத்து:** விசுவாசிகள் பரிசுத்த பரம திவ்விய நற்கருணையைத் தங்கள் வாழ்க்கையின் மையமாக அமைத்துக் கொள்ளும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** இந்தோனீஷியாவிலே கிறீஸ்துவ அடிப்படையில் சமூக அமைப்பு உருவாகும்படியாக மன்றாடிக்கொள்வது.


சத்தியவேத

# பாதுகாவலன்

1956-ம் ஆண்டு

கார்த்திகை மாதம் 22-ந் திகதி


வண. செலஸ்ரின் மார்ஜெறி

சுவாமியவர்களின்

## தேகவியோகம்

தமதுகுருத்துவ வாணுள்முழுவதையும் எம்மிடையே பரிபூரணமாகக்கழித்து, எமக்காக அல்லும்பகலும் அயராதுழைத்து, எமது யாழ்ப்பாணமண்ணுக்கே தமதுகாயத்தையும் தியாகஞ் செய்யும் அந்தப்பாக்கியமான சுபநாளை ஆவலுடன்எதிர்பார்த்துப் பரலோகத்துக்குப் பழுத்த ஓர் கனியாய், காலங்கண்ட ஓர் குருமுனியாய், களங்கமறியா இதயம் படைத்த ஓர்புனித குருவாய் விளங்கியிருந்த வண. செலஸ்ரின் மார்ஜெறி சுவாமிகளின் மறைவாலே எமதுமேற்றிராசனம் மற்றும் ஓர்அருமையான, பெருமை வாய்ந்த குருதந்தையை இழந்து சந்தாபிக்கலாயிற்று.

கிறீஸ்துவ சகாப்தத்தின் 1956 ஆண்டுகளிலும் தமதுகுருத்துவ திருத்தொண்டிலே 56 ஆண்டுகளையும், குருப்பட்டத்துக்குப் படித்து, வேண்டிய புயிற்சிபெறுவதிலே 8ஆண்டுகளையும் செலவிட்டுள்ள சுவாமியவர்கள் பிரான்ஸ்தேச பெர்த்துயிஸ் பட்டினத்தில், செல்வவளம் பொருந்தியஓர்குடும்பத்திலே இற்றைக்கு 81 ஆண்டுகளின்முன்னே பிறந்தார். தமது 25-ம் வயதிலே அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள் சபையில் சேர்ந்தார். மற்றோர் குருதிலகமாயிருந்து காலஞ்சென்ற வண. எல். கிற்றோ சுவாமிகளுடன் 1901-ம் ஆண்டு ஆடிமாதம் 7-ந் திகதியன்று லீயேஜ்நகரிலே குருப்பட்டம் பெற்று, மறுவருடம் அவரோடுதானே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து ஊர்காவற்றுறை, வவுனியா, யாழ்ப்பாண மேற்றிராசனக்கோவில், யாழ்ப்பாணம் பரிசுத்தஅடைக்கலமாதா கோவில், மயிலிட்டி, இளவாலை, நாரந்தனை ஆதியாம் பல்வேறு விசாரணைப் பங்குகளிலும் திருத்தொண்டாற்றித் தாம்சென்ற இடங்களிலெல்லாம் அருமைப்பெருமையான ஓர் குரவராகக் கொண்டாடப்பட்டு வந்தார்.

அன்புததும்பும் அவரதுசுபாவமும், அருளோடுகூடிய அவரது கனிந்தபார்வையும், களங்கமேயறியாத மனப்பான்மையும் எவரையுமே அவர்பால் ஈர்ந்துகொள்ளும் சக்திவாய்ந்தன. "குழந்தையும், தெய்வமும் கொண்டாடுமிடத்திலே" என்னும் முதுமொழிக்கொப்ப எந்தவேளையுமே மலர்ந்தவண்ணமும், புன்னகை தவழ்ந்தவண்ணமும் பொலிந்து விளங்கும் அவரதுபுனிதவதனம் எவரைத்தான் வசீகரஞ் செய்யாதிருக்கும்? எப்போதுமே நகைச்சுவைதேங்கும் அவரது ஹாஸ்ய மொழிகளைக் கேட்டுச் செவி குளிர்ந்து எவர் உள்ளந்தான் மகிழ்ச்சி கொள்ளாதிருக்கும்? சுவாமிகள் ஏழைகள்பால் மிகுந்த கருணையும், அனுதாபசிந்தையுமுள்ளவர். அந்தநாளிலே அவர் யாழ்ப்பாணம் வந்ததைத்தொடர்ந்து சீமையிலிருந்து தமது குடும்பத்தினர் பணமாகவும், பொருளாகவும் நெடுங்காலமாகத் தமக்கு ஏராளமாய் அனுப்பிக்கொண்டிருந்தவைகளையெல்லாம் ஏழைமக்களுக்கு அன்னதானம், சொர்ணதானம், வஸ்திரதானம், வித்தியாதானமாக வரையாது கொடுத்துவந்த அவரது வள்ளற்றன்மையைக் கண்ணுற்றோர்பலரும் அவர் ஏதோ செல்வஞ்செல்வாக்குள்ள ஓர் குடும்பத்தைச் சேர்ந்தவராயிருக்கவேண்டுமெனப் பேசிக்கொண்டனர். ஆனால், அவரோ இதுவிஷயமாய் எப்போதும் மவுனமே சாதித்துவந்தார். பொதுவிலே சுவாமியவர்கள் தாம் போனவிடமெல்லாம் தமது ஞானமக்களின் சேமாபிவிர்த்திக்கும், சுபீட்சத்துக்குமாகச் சிறப்பாய்உழைத்து, சுவைக்கச் சுவைக்கத்தெவிட்டாத அமிர்தம் பொழியும் தமதுமதுரமொழிகளால் யாவரையுமே சந்துஷ்டியாகவாழச்செய்து, எல்லோரது அன்பையும், நன்மதிப்பையும் அதிகமாகப்பெற்று வந்திருந்தாராகலின் அவரதுதிருத்தொண்டுகள் மிகவும்புகழ்ச்சிக்குரியனவாயின.

கடைசியாக நரைதிரைகண்டு, விருத்தாப்பியமேலிட்டு ஓர்மகாரிஷிகோலமாய், தபோதனரின் திருவடிவங்கொண்டு இற்றைக்குச் சுமார்எட்டு ஆண்டுகளாக மேற்றிராசனமாளிகைவந்து இளைப்பாறியிருந்த சுவாமியவர்கள்செபத்திலும், தியானத்திலும், ஞானவாசினையிலும் தமது அந்தியகாலத்தைச்செலவிட்டுப் பரகதிக்குக் கனிந்தபழமாய்என்றும் போல அமைதியாகவும், சந்தோஷமாயும் இருந்துவந்தார். கடைசியாகச் சர்வேசுரன் தமது குருதொண்டருக்குச் சம்பாவனை அருளும் அந்தப்பாக்கியமான நாள் அண்மியது. நோய்கண்டு மூன்றுநாள். மூன்றாம்நாள்பாயும் படுக்கையுமானார். அந்தியதேவதிரவிய அனுமானங்களைநல்லறிவுடன்பெற்றார். அந்தியவேளையிலும் நகைச்சுவை தேங்கும் அவரது ஹாஸ்யமொழிகள் குறைந்தபாடில்லை. குரவர்கள் செபங்கள்சொல்லி ஆசிகூறிநிற்க, சமாதானத்தில் இளைப்பாறினார். அவரதுமரணத்தைக் கண்ணுற்றகுரவர்ஒருவர் ஆச்சரியவசத்தராய் "என்னபாக்கியமான ஒரு நல்மரணம்; எனக்கும் இப்படிக் கிடைத்தாலோ" எனக்கூறிநின்றாராம்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை குருமார்முப்பதின்மரும், கன்னியாஸ்திரிமார் அறுபதின்மரும், பல்வேறு கலாசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும், சுவாமிகளிடம் ஆன்ம, சரீரநன்மைகள் பெற்றுக்கொண்ட பல்வேறு விசாரணைப்பங்குகளைச் சேர்ந்த மக்களும்; மற்றுங்கிறீஸ்துவர்களும் ஆசனக்கோவிலிலே திரளாகக்குழுமியிருந்த சமூகத்தில் சுவாமிகளின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மேற்றிராணியாண்டவர் அவர்கள் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றினார். பின்னர்நடைபெற்ற அந்திமதிருச்சடங்குகளின் பின்சுவாமிகளின்திருமேனி ஊர்வலமாகச் சேமக்காலைகொண்டு சென்று நல்லடக்கஞ்செய்யப்படலாயிற்று.

R. I. P.

## விழுகையின் காலம்

யூதர்களின் நாடாகிய இஸ்றாயேலும்,அதனைத்தொடர்ந்துபிரித்தானியும், பிரான்சும் எகிப்தில்அல்ல, தமது நாட்டிலேயே படையெடுத்தாற்போன்று சோவியற் ருஷிய தலைவர்கள் இன்று நடாத்திவரும் திருவிளையாடல்களோ சாற்றுந்தரமன்று. அவர்கள் இரும்புத்திரையிட்டு அடிமைப்படுத்திக்கொண்ட போலாந்து, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, செக்கோசிலவக்கியா முதலாம்நாடுகளிலே நடத்திவருகிற அட்டூழியங்களையும், நிட்டூரங்களையும், பழிபாதகங்களையும், பயங்கரக் கொலைகளையும் எகிப்திய படையெடுப்புப்போர்வையினுள் மறைத்துவிடுவான் செய்துவருகின்ற தந்திர சூழ்ச்சிகளோ இம்மட்டன்று. ஒரு நரிஊளையிட்டால் ஒன்பதாயிரம்நரிகளும் ஊளையிட்டு ஊரார்வாயை மூடிவிடுவதுபோலச் சோவியற்ருஷியா ஆட்சேபிக்கவே, அதைத்தொடர்ந்து கம்யூனிஸ்தசீனு, அதைத்தொடர்ந்து உலகின் பலநாடுகளிலும் கூட்டங்கூட்டமாய் இருந்துவருகின்றகம்யூனிஸ்தகட்சிக் குழாங்கள் ஆட்சேபித்துக் கூச்சலிடத்தொடங்கும். அண்டகோளங்களும் அதிரும்படியான இந்தஆட்சேப கூச்சல்களின்மூலம் சோவியற் தலைவர்கள் உலகநாடுகளையெல்லாம் எகிப்தின் பக்கமாகத் திருப்பிவிட்டு, இரும்புத்திரைக்குப்பின்னால் ஆட்டங்கண்டுள்ள போலாந்து, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியாமுதலாம் கம்யூனிஸ்த ஆட்சிநாடுகளில் சுதந்திர வீறுகொண்டு கலகத்துக்கெழுந்திருக்கும் மக்களையெல்லாம் தங்கள் ஆயுதபலத்தைக்கொண்டு அடக்கிவைக்க முனைந்திருக்கின்றார்கள். ஹங்கேரியில் சோவியற்படைகள்செய்துள்ள கொடிய மிருகத்தனமான செயல்களைக் கேள்விப்பட்டுச் சுதந்திரஉலகம் திகைக்கின்றது. அவைகளைப் பற்றிய செய்திகளாலே திகில்கொள்ளுகின்றது. இம்மாதம் 14-ந்திகதி வரை ஹங்கேரியிலிருந்து பதினாயிரம் மக்கள் ருஷியாவுக்குப்பலாத்காரமாகக் கொண்டுபோகப்பட்டனரென்றும், இன்னும் பல்லாயிரவர் கொண்டுபோகப்பட்டு வருகிறார்களென்றும் செய்திகிடைத்திருக்கிறது. அன்றுருஷியாவில் சோவியற் புரட்சியின்போதும், அதன் மேல் இரும்புத்திரைக்குப்பின்னால் பல சிறியநாடுகளையும் அடிப்படுத்திய போதும் கோடிக்கணக்கானோரைக் கொன்றழித்துச் சோவியற்தலைவர் வெற்றியீட்டினார்கள். இன்றுஇரண்டாவதான மாபெரும் இரத்தப்பழியில் இவர்கள் இறங்கியிருப்பது தங்கள் விழுகையைச் சமாளிப்பதற்கேயாகும். இரும்புத்திரைக்குப்பின்னால் கொந்தளித்துக்கொண்டிருக்கும் நாடுகள்ஒருபுறமும், ஜேர்மனியிலே புத்துயிர்பெற்றுவரும் இராணுவபலமும், உலகமுழுவதிலும்ஏற்பட்டிருக்கும் கம்யூனிஸ்தஎதிர்ப்பும் சோவியற்தலைவர்களுக்கு அச்சத்தை உண்டுபண்ணியிருப்பது ஆச்சரியமல்ல. ஆற்றுதஙெண்டு தழலைக் கௌவியவாறே இன்று அவர்களின் செயலும்என்க.

## ஐக்கியத்துக்கு ஆங்கிலம்

கொழும்பிலே சென்றசனிக்கிழமை ஹாட்லிக்கல்லூரிப் பழையமாணவர் சங்கத்தின் வருடாந்தவிருந்தின்போது நிதிமந்திரி திரு. ஸ்ரான்லி டி சொய்சா கூறியகூவகள் ஊன்றியோசிக்கத்தக்கனவாகும். அதாவது:

"ஆங்கிலத்தைச் சரிவரவும், போதியதாகவும உபயோகிப்பதே இந்நாட்டினை ஒற்றுமைப்படுத்த உதவிசெய்யக்கூடியதாகும். பாடசாலைகளிலே மாணவர்களை மூன்றுபிரிவுகளாக்கிக் கல்விகற்பிக்கும திட்டமானது, வகுப்பு அறைகளிலே ஒற்றுமை மனப்பான்மையை உண்டுபண்ணுவதற்கு உதவி செய்வதாயில்லை. அதனால் சகோதரத்துவஉணர்ச்சியும், ஒற்றுமை உணர்ச்சியும் இல்லாமற்போய்விட்டன. இலங்கைக்குச் சுதந்திரத்தை ஈட்டிக்கொடுத்த, ஐக்கியமாய்இருக்கிறோம்" என்றஉணர்ச்சி வகுப்புஅறைகளில் இப்போது கொன்றொழிக்கப்பட்டு வருகிறது. முந்திய அரசாங்கம் செய்த தவறுதான், இப்போதையநிலைமையைக் கொண்டுவரலாயிற்று.

"கடந்தகாலங்களிலே ஆங்கிலபாஷைதான் மக்களை ஐக்கியமாயிருக்க ஒன்றுகூட்டிவிட்டது. நாடுபிரிக்கப்படுவதிலிருந்து ஆரம்பத்திலேயே—வகுப்புஅறையிலேயே அதைப்பாதுகாத்துவைக்குமாறு கல்விமான்கள் மனப்பூர்வமாகப் பாடுபடுவார்களென நான்நம்புகின்றேன். இதற்கு ஆங்கிலத்தைச் சரிவரவும, போதியஅளவாகவும் உபயோகப்படுத்துவதே உதவிசெய்யக்கூடிய ஒரேயொருகாரியமாகும். இன்று எமதுநாடு முன்னர்எப்போதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும்பார்க்க அதிகம்பிளவுபட்டுக் கிடக்கிறது. இது பெரிதும்கவலையைத்தரும் ஓர்காரியமாகும். இந்தநிலைமை பின்னரும்தொடர்ந்து போய்க்கொண்டிருக்குமானல் ஈற்றுந்தகதி என்னவாகுமென்பது எனக்குத்தெரியவில்லை. நாட்டில் பிளவைக் கொண்டுவந்துள்ள மொழிப்பிரச்சினை எவருக்குமே— சிங்களவர்களுக்காயினுஞ்சரி, தமிழர்களுக்காயினுஞ்சரி— நன்மையைச் செய்யவில்லை. ஆகவே, மக்கள்எல்லோரும் தங்கள் வேற்றுமைகளேயும், பகைகளேயும் மறந்து நாட்டின்முன்னேற்றத்திற்காக ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். சிங்களவருக்குத் தமிழும், தமிழருக்குச் சிங்களமும் அவசியமாகையால் மொழியும், மதமும் பிரிவினையை உண்டாக்கியிருக்கக்கூடாது. அரசாங்கசேவையிலோ, அன்றேல் மற்றும் துறைகளிலோ இருந்துவருகின்ற எவருக்குமேபாஷை விஷயமாய் அநீதி இழைக்கப்படமாட்டாதென உங்களுக்குநான் உறுதிவாக்களிக்கின்றேன். நீங்கள் தமிழர்களாய் இருந்தாலென்ன, வேறெந்தச்சாகியத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலென்ன ஐக்கியப்படுமாறு மனுப்பண்ணுகின்றேன். விசேஷமாய்க் கடந்தசிலமாதங்களிலே நிகழ்ந்துள்ள சிலகாரியங்களைச் சகிப்புத்தன்மையுடன் நோக்குமாறு தமிழ்மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். சிங்களவர்களை விரோதிகளாக அல்ல, சிநேகிதர்களாகநடத்திவரும்படியும், நல்லசிங்களவர்கள், அல்லது நல்லதமிழர்களாய்அல்ல, ஆனல், நல்லஇலங்கையர்களாய் நாம் இருக்கத்தக்கதாக நன்மனப்பான்மை காண்பிக்கும்படியும் உங்களைக்கேட்டுக் கொள்ளுகின்றேன்.''

என்றுமில்லாதவிதமாய் இலங்கை மக்கள் இன்று பிளவுபட்டுக்கிடப்பது பெரிதுங்கவலைக்குரிய ஓர்காரியமே. ஆனல், இந்தப்பிளவை உண்டுபண்ணிவிட்டது எதுவென்று எவருமே கூறவேண்டியதில்லை. தனிச்சிங்களசட்டத்தை நிறைவேற்றியதுதான்வகுப்புத்துவேஷம் தலையெடுக்கக் காரணமாகும். தனிச்சிங்களசட்டம் நீடித்திருக்கும்வரை இந்தத்துவேஷமும் நீடித்துக்கொண்டேயிருக்கும். நிதிமந்திரியார் இதனைநன்ருக அறிந்தும் அறியாதவர்போல் பிறதுறைகளில் பேசிக்கொள்வதால் யாதுபயனும்வரப் போவதில்லை.

---

● உலகின் மகாஅபூர்வமான புகையிரதப்பாதைஒன்று, எக்குவடோர் நாட்டின் மலைகளிலே இருந்துவருகிறது 228மைல்நீளமான அப்பாதை கடல்மட்டத்துக்குமேலுயரத்திலுள்ள குவாயாக்குயில்என்ற துறைமுகப்பட்டினத்திலிருந்து மேலேறிச்சென்று 9,300அடிஉயரத்திலுள்ள குயிற்றோ தலைநகர்போய்ச் சேருகின்றது.

● அமெரிக்கபோரான போட்மோட்டர்ஸ்தாபனம் 1936-ம்ஆண்டிலே பிரபலமோட்டர்ரத உற்பத்தியாளரான திரு. ஹென்றிபோட்அவர்களால் அடியிடப்பட்டது. இந்தஸ்தாபனம் இதுவரை சுதந்திரஉலகின் 13தேசங்களிலுள்ள பல்வேறு ஸ்தானங்களுக்கும் கோடிக்கணக்கானரூபா நன்கொடையளித்திருக்கிறது. உதாரணமாக, கிராமவாழ்க்கை, கல்விஆதியவற்றின் விருத்திக்கென ஒருகோடிரூபா இந்தியாவுக்கு வழங்கியிருக்கிறது.




## குருத்துவமும் பிரயாணமும்

யேசுசபையின் புனிதத்தன்மையையும், அதன் சிறந்தநோக்கத்தையும் அறியவந்தபாப்பானவர்ஆச்சரியவசத்தரானுர். அச்சபையைச் சேர்ந்தவர்களில் தகுதிவாய்ந்தோரைக் குருமாராக்க அனுமதியளித்தார். குருபதவிக்கு உயர்த்தப்பட்ட பிரான்சீஸ் சவேரியாரின் உள்ளத்தில் ஆனந்தவெள்ளம் மடைதிறந்து பாயத்தொடங்கியது. அகிலத்தை உருவாக்கிய அமலனைத் தமதுகரங்களில் ஏந்தும் பாக்கியம் தமக்கு அளிக்கப்பட்டமையால் அவர்அடைந்த ஆனந்தத்திற்கு ஓர்அளவேயில்லை. நித்தியகுருவாகிய யேசுநாதரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தமது குருத்துவசீவியத்தை ஆரம்பிக்குமுன் நாற்பதுநாள் கடுந்தபம்புரிந்தார். அதன்மேல் தமது சபைச்சகோதரர் மத்தியில் கண்ணீர் மல்கும் கண்களுடன் தமதுமுதற் பூசையை நிறைவேற்றினர். சிலநாட்களின்பின் இஞ்ஞாசியாரின் கட்டளையைச் சிரமேற்கொண்டு றோமாபுரிக்குப் பயணமானுர்.

வியாபாரத்தைநாடிக் கீழைத்தேசங்களுக்குவந்த போர்த்துக்கேயர் அவைகள் அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருப்பதை அவதானித்தனர். இந்நாடுகளையெல்லாம் அமலனிடமாக வெல்லவேண்டுமென்றஆசை அவர்கள் இதயங்களில் உதயமாயிற்று. போர்த்துக்கேயமன்னர் இந்நாடுகளில் வேதம்போதிப்பதற்குக் குருமாரை அனுப்பும்படி பாப்பானவரைத்தூண்டினர். தேவநியமனத்தால் பிரான்சீஸ் சவேரியார் இந்நாடுகளுக்கு வேதம் போதிக்கப் போர்த்துக்கேயஸ்தானிகருடன் அனுப்பப்பட்டார்.

கீழைத்தேயங்களை நாடிப்புறப்பட்ட சவேரியாரும், ஸ்தானிகரும் மூன்றுமாதங்களின்பின் பம்போலூனுநகரை அடைந்தனர். பம்போலூனு நகரிலிருந்து சவேரியாரின் ஜனனபதியாகிய சேவியர்இல்லம் மிகஅண்மையிலிருந்தது. ஆகவே, ஸ்தானிகர் அவர் தமது இல்லஞ்சென்று தம்முடைய பிரியதாயையும், உறவினரையும் சந்தித்துப் பிரியாவிடை பெற்றுவரும்படி ஏவினர். சவேரியாரோ அதற்கு இசையவில்லை.

"உறவினர்களைக்கண்டு, துன்பமும் துயரமும்கலந்த அவர்களின் பிரிவுமொழிகளைக் கேட்கவும், பிரிவின் சோகக்காட்சிகளைக் காணவும் நான் விரும்பவில்லை; விண்ணுலகில் துயரம் கலவாதநிலையில் அவர்களைச் சந்தித்துக்கொள்ளலாம்'' என்று பதிலளித்தார். சவேரியாரின் பற்றற்ற வாழ்வு ஸ்தானிகரின்உள்ளத்தில் ஓர்புத்துணர்ச்சியை எழுப்பியது. இவ்வண்ணம் பிரயாணஞ்செய்து லிஸ்பன்பட்டணத்தை அடைந்தசவேரியார் அங்கு சிலநாட்கள் தங்கியபின் இந்தியாவை நோக்கிப்புறப்பட்ட ஓர்கப்பலில் ஏறித் தமதுபிரயாணத்தை ஆரம்பித்தார்.

— நல்லூர்

## அர்ச். சவேரியார் திருநாள்

### திருநெல்வேலி

இம்மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை நோவனைகள் ஆரம்பமாகும். யாழ்ப்பாணத்திலுள்ள அர்ச். சவேரியார் பக்தர்களின்வசதிக்காக 24-ந் திகதி முதல் 30-ந் திகதிவரை நோவனைகள் சாயந்தரம் 4-30 மணிக்கு ஆரம்பமாகி 5-30 மணிக்கு முடிவாகும். 1-ம் 2-ம் திகதிகளிலே சாயந்தரம் 7 மணிக்கு ஆரம்பமாகி 8 மணிக்குமுடிவாகும். 2-ந் திகதி வேஸ்பர். 3-ந் திகதி காலை 6 மணிக்கு முதற்பூசை, 7 மணிக்குப் பாடற்பூசை. பூசைமுடிவில் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்தேறும்.

## மாதோட்டத் தபால்

### நாட்டுத்தூதன்

ஐயா! கடந்த ஓராண்டுகால நீடிய வரட்சியின்பின் சென்றவாரமுதல் இவ்விடம் நல்லமழை பெய்துகொண்டு வருகிறது. இன்னும் தொடர்ந்து மழைபெய்யும் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அதனுல், கமக்காரர் அகமகிழ்ந்து சேற்றுழவை ஆரம்பித்து நடத்திவருகின்றனர். நிற்க, அற்பனுக்குப் பவிள்சுவந்தால் அர்த்தஇராத்திரியில் குடைபிடிப்பானும். இவ்வாறே ஓர்சாராருக்குக் கண்டுங்காணுமலோ, அன்றேல் கேட்டுங்கேளாமலோ அற்பஉத்தியோகம் ஒன்று அல்லது சிறுவருவாய் கிடைத்துவிட்டால் ஒருமுட்டையிடும்கோழியைப்போல் கொக்கரித்து அண்டகோளங்களும் அதிரும்படியாக ஆர்ப்பரித்துத் தங்களைப்போன்ற மேதாவிகள் வான்கவிந்த இந்தவையகத்தில் இல்லையெனத் தம்பட்டமடித்து இறுமாப்படைந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகின்றனராம். ஆனல், ஆயிரம்முட்டையிடும் ஆமையைப்போன்று அமைதியாகத்தொண்டாற்றுவதே அறிவுடையார் செயலாகும்.

**பாதகக்கொலை:** முசலிக் காரியாதிகாரியின் பிரிவைச்சேர்ந்த அளவக்கைக்கிராமத்திலே சந்தனம்என்னும் ஒருவர் தனதுமனைவியான மாரியாயை மானபங்கமாக வீட்டுக்கப்புடன்கட்டிவைத்துப் பழுக்கக்காய்ச்சிய இரும்புக்கம்பியால் உடலின் பலபாகங்களிலும் வாருகச்சுட்டுக் கொலைசெய்தாரென மன்னர்க்கோட்டில் வழக்குத் தொடரப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிருர். வருகிற 27-ந்திகதி மேற்கொண்டு விசாரணை நடைபெறுமெனத் தெரியவருகிறது. புத்த ஜயந்தி முடிவதற்குள் இன்னும் என்ன என்ன கொலைபாதகங்கள் நடைபெறுமோ தெரியவில்லை. தூக்குத்தண்டனை நிற்பாட்டப்பட்டிருப்பதும் தீச்செயல்களின் பெருக்கத்திற்குக் காரணமாகும்.

**குடிஏற்றம்:** மருதமடுவிலிருந்து வவுனியாவுக்குச்செல்லும் தெருவிலே திருசேத்திரத்தைஅடுத்துள்ள பன்றிவிரிச்சானில் குடியேற்றமுயற்சிஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. இதிலே மன்னர்-மாதோட்டப் பகுதியிலுள்ளவர்களே பெரும்பாலும் குடியேற்றப்படுகிருர்கள். தற்போது வங்காலையில் இருந்து சுமார் நாற்பதுகுடும்பங்கள் வரை குடியேறியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறே பெரியமடுவிலும் குடியேற்றவேலை மிகுந்தஊக்கமாய் நடைபெறுவதாக அறியக்கிடக்கின்றது. எத்துணை ஊக்கமாகக் குடியேறுகின்றனரோ அத்துணை ஊக்கமாக அவ்வவ்விடங்களில்நின்றுபிடித்து உழைத்து, அவ்வப்பகுதிகளைத் திருத்தமுயற்சிப்பதே அவர்களின் செயலாகும்.

---

✝

முதல் வருட

## மரண ஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 2-5-1920 | 28-11-1955 |

திருமதி செ. செபமாலை செல்வராணி மரணத்திரையில் மறைந்த முதல்வருடம் நிகழும் 28-11-56-இல் பூர்த்தியாகிறது. அன்றுகாலை 6 மணிக்கு ஊர்காவற்றுறை சந்தியோகுமையோர்கோவில், மட்டக்களப்பு அர்ச். வியாகுலமாதா கோவில், யாழ்ப்பாணம் அர்ச். அடைக்கலமாதாகோவில் எனும் மூன்றுகோவில்களிலும் அவவின் ஆன்மசாந்திக்காகத் துக்கப் பாடற்பூசைகள் நிறைவேறும்.

இவவின் ஆத்துமசாந்திக்காக இதனை வாசிப்பவர்கள் வேண்டிக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மிகவும் மதுரமான யேசுவே! தேவரீர் திருச்சிலுவையில் தொங்கும்போது அனுபவித்த அளவில்லாத கஸ்தியைப்பார்த்து, இவ்வாத்துமத்தை இரட்சித்து, மோட்சஇராச்சியத்தின் செல்வபாக்கியங்களுக்கும், நித்தியானந்த சந்தோஷத்துக்கும் பங்காளியாயிருக்கக் கிருபைசெய்தருளும்.

மனைவியைஇழந்து துயருறும்
கு. செபமாலை
(பொலிஸ் இன்ஸ்பெக்றர்,
ஊர்காவற்றுறை மேற்கு.)

பிள்ளைகள்:
செ. அ. பிரான்சீஸ்சேவியர்,
செ. மேரிதிரேஸ் இராசமலர்,
செ. மேரிகிறேஸ் பிரேமலா.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

சதாசகாயமாதாவின் காருண்ணியகிருபையினல் எனது மன்ருட்டுக் கிடைக்கப்பட்டது. உத்தியோகபதவிசம்பந்தமாய் எனது மகளுக்குஏற்பட்ட இன்னலைத் தீர்த்தருளும்படி நவதினவேண்டுதல் புரிந்தேன். சதாசகாயமாதாவின் அருளால் இன்னல் தீர்ந்தது. சதாசகாயமாதாவுக்கு நன்றி கூறுகிறேன். நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

பருத்தித்துறை சி. ம.

* * *

இரக்கமும், நேசமும்நிறைந்த மாசில்லாத இருதயநாயகியை நம்பி மன்ருடினேன். அவவுடைய புதுமையினல் எனக்குவந்த நோய், கடன்தொல்லை, வழக்கு முதலான ஆபத்துக்களில் ஆறுதலடைந்தேன். இன்னும் எனக்கிருக்கும் தொண்டைவியாதி, வயிற்றுவியாதியும், மற்றும் சஞ்சலமனக் கவலைகளும் நீங்கும்படி கிருபைபுரிய அவவை மன்ருடுகிறேன். இதை நேர்த்திப்படி பிரசுரஞ்செய்கிறேன்,

மாதகல் ஆ. சூசானம்மா

**மகிழ்ச்சி பொங்கும் சிரிப்புக்கு ஊற்று மகிழ்ச்சிநிறைந்த இருதயந் தான். கருணையில்லாவிட்டால் உண்மையான மகிழ்ச்சி இருக்காது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புரொட்டஸ்தாந்தரும் பாவசங்கீர்த்தனமும்

ஜேர்மனிதேச பிருங்வேட் நகரிலே சமீபத்தில் நடந்தேறிய புரொட்டஸ்தாந்தசபை மகாசங்கத்துக்குச் சமுகமளித்திருந்தபோது கத்தோலிக்கர்அல்லாத நூற்றுக்கணக்கானபேர்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்துகொண்டார்கள். இந்த மகாசங்ககூட்டம் கிழக்குஜேர்மனியிலிருந்துபோன சிலர்உட்பட ஓர் பெருந்தொகையான பிரதிநிதிகளின் கோஷ்டிகளை ஈர்ந்துகொள்ளலாயிற்று. பிருன்டென்பேர்க் நகரைச் சேர்ந்த கனம். அல்பேட் ஸ்கூனர் பாதிரியார் மகாசங்க கூட்டத்திலே பாவசங்கீர்த்தனத்தைப்பற்றிப் பேசினர். அவர் பேசியதன்மேல் அதிகமாக லுத்தேர் சபையைச்சேர்ந்த புரொட்டஸ்தாந்த பாதிரிமார்எண்மர் சக்கிறிஸ்தி அறைகளிலே தனித்தனியாகப் பாவசங்கீர்த்தனங்கேட்க ஆயத்தமாய்இருந்தார்கள்.

கனம். டக்றர் ஸ்கூனர் பாதிரியார் பாவசங்கீர்த்தனத்தைப்பற்றிப் பேசியபோது, பாவமன்னிப்பின் அவசியத்தைப்பற்றி அழுத்தமாகஎடுத்துக் கூறினர்.என்றும்இல்லாதவகையிலேமனிதவர்க்கம் பாவமன்னிப்பு அடைவதை இன்று அதிகமாக வேண்டிநிற்கின்றதென்று அவர் வற்புறுத்தினர். மாட்டின் லுத்தேர் ஒருமித்தும், தனித்தும் பாவசங்கீர்த்தனஞ் செய்வது "சொந்தவிளக்கம்" என்னும் கொள்கையுடையவராய் இருந்தார்; பாவம் என்பது ஒருஉண்மையான காரியம்; இந்தஉண்மையைப்பற்றிப் பாரதூரமாகச் சிந்திக்கவேண்டுமென்றும் அவர் கூறினர்.

கத்தோலிக்கருடையதேயென்று தற்போது கண்டிப்பாகக் கருதப்படுகின்ற பாவசங்கீர்த்தனத்தைத் திரும்பவும் ஏற்படுத்தவேண்டும் என்பதற்குச் சார்பானகருத்து ஐரோப்பியபுரொட்டஸ்தாந்தர்கள் மத்தியிலே பிறந்திருக்கிறது. தாமும் பாவசங்கீர்த்தனத்தைத் திரும்பவும் தம்முள்ஏற்படுத்திக் கொள்ளப் புரொட்டஸ்தாந்தர் சிலவருடங்களாக முற்பட்டுள்ளனர்.

ஆல்டென்பேர்க்நகர புரொட்டஸ்தாந்தபிஷப் வில்ஹெம் ஸ்ராச்லின் அவர்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்வதிலே கரிசனைகொண்டுள்ள ஓர்விசேஷ கைத்துணை நூலைச்சமீபத்திலே சிபாரிசுசெய்திருக்கின்றார்.

கல்வீன் புரொட்டஸ்தாந்தசபை ஸ்தாபகரான ஜோண் கல்வீன் என்பவர் தமதுவழியைப் பின்பற்றுவோருக்குத் தனிப் பாவசங்கீர்த்தனத்தைச் சிபாரிசு செய்துள்ளனர்எனச் சுவிற்சர்லாந்த, பிரான்சிய புரொட்டஸ்தாந்த சபைவிற்பன்னர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். "சமய சீர்திருத்ததலைவர்களின் படிப்பனைகளை நாம் ஆராய்ந்து சிந்தித்துப்பார்த்தால் நாம் எவ்வாறு பாவசங்கீர்த்தனத்தைக் கை நழுவவிட்டுவிட்டோம்என்று விளங்கிக்கொள்வது கஷ்டமாயிற்று" என்று பிரான்சிய புரொட்டஸ்தாந்த ஐக்கியசபைகளின் தலைவரான கனம். மார்க் போக்னர் அவர்கள்பிரான்சிலே ஓர் முறை பிரசித்தமாகக் கூறியிருக்கின்றார்.

கத்தோலிக்க படிப்பனைப்படி, பாவசங்கீர்த்தனம் திருச்சபையின் ஏழு தேவதிரவிய அனுமானங்களுள்ஒன்று. பாவியின்பாவங்கள், மனஸ்தாபம், சங்கீர்த்தனம், அபராதம்என்பன இத் தேவதிரவிய அனுமானத்தின் பொருள். அதன்மாத்திரை பாவப்பொறுத்தலின் வார்த்தைகள். முறையான மேற்றிராணியார் அல்லது குருவானவரே பாவசங்கீர்த்தனம்எனும் தேவதிரவிய அனுமானத்தை நிறைவேற்றலாம்.

---

# மக்கள் படுகொலை

— பெஞ்சமின் ஏ. வெஸ்ற் —

கிழக்குஐரோப்பாவிலே கட்டுண்டு கிடக்கும்மக்கள் சோவியற் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் புரட்சிசெய்தால் என்னநேரும்? சோவியற்தலைவர்கள் இப்போது இந்தக்கேள்விக்கானவிடையை ஹங்கேரியின் இரத்தத்தைக் கொண்டு எழுதியிருக்கிறார்கள். தங்கள் நாடுகளில்ஒன்று சுதந்திரமடைவதையும், உண்மையான ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதையும் தடுத்துவைக்கச் சோவியற்தலைவர்கள் எதையும் துணிந்துசெய்வார்கள்என்பதை மஸ்கோ கம்யூனிஸ்தஆட்சிபீடம் நிரூபித்துள்ளது. மஸ்கோவின் ஆணையை எதிர்ப்போருக்கு ஹங்கேரியில் இடமிருப்பதாகத் தெரியவில்லை.

இந்தக்கட்டுரையை எழுதும்சமயத்திலே ஐரோப்பாவில் மிகமிகப்பெரிய இராணுவசக்தி தனதுமுழுப்பலத்தையும்கொண்டு ஹங்கேரியைத் தாக்கியிருக்கிறது. ஹிற்லரது காலத்துக்குப்பின் இத்தகையமிருகத்தனமான பாய்ச்சலை இப்போதுதான் காண்கிறோம். ஹங்கேரிய தேசாபிமானிகள் சோவியற்கவசப்படைகளாலும், விமானங்களாலும் திட்டமாகப் படுகொலை செய்யப்படுகிறார்கள். ஆஸ்திரிய எல்லைக்குச்செல்லும் எல்லாவழிகளையும் சோவியற்தாங்கிகள் மறித்துக்கொண்டு நிற்கின்றன. தெலிபோன், தந்திப் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

இம்மாதம் 5-ந்தேதி விடியற்காலை "ரூஷியாவின் மிருகத்தனமான கலனிஆட்சி"யைப் பின்னருந்தொடர்ந்து எதிர்த்துப் போராடுங்கள்என்று ஹங்கேரிய வானொலிநிலையம்ஒன்று அறைகூவியது. "கட்சியின் பெயராலோ அல்லது வேறுஎக்காரணத்தினாலோ ஹங்கேரியைக் கைப்பற்றிவரும் கலனிஆட்சியுடன் ஒத்துழைப்பவர்கள் எல்லோரும் நாட்டுக்கும், கம்யூனிஸ்த இலட்சியத்துக்கும் துரோகிகளாவர்; அவர்களை நாம் எதிர்த்துப் போராடுவோம்" என்றும் அந்தவானொலி நிலையம் கூறியது.

நாட்டுப்பற்றுள்ள இந்தஹங்கேரிய மக்களை "பாசிஸ்த எதிர்ப்புரட்சிக்காரர்கள்" என்று சோவியற்தலைவர்கள் வர்ணிப்பது பெருங்குதர்க்கமாகும். அவர்கள் தங்களது மோசடி எண்ணத்தையும், துரோகச்செயலையும் ஹங்கேரியில் தாங்களாகவே அம்பலப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் புரட்சிக்குப்பிறகு புதியஹங்கேரிய அரசாங்கத்தின் பிரதமமந்திரிபதவியைத் திரு. இம்றிநாகி ஏற்றபொழுது அவர் ஹங்கேரி வருங்காலத்தில் நடுநிலைமை நாடாயிருந்துவரும்என்றும், சோவியற் இராணுவத்தலைமையிலுள்ள வார்சோஒப்பந்தத்தை ஹங்கேரி நிராகரிக்கும் என்றும் பகிரங்கமாக அறிக்கைசெய்தார். உடனே தனது நாடுகளில் சோவியற்படைகளைநிறுத்திவைப்பதுகுறித்துப் புனராலோசனை செய்வதாக மஸ்கோ வாக்குறுதியளித்தது. இதுநிகழ்ந்தது ஐப்பசி 30-இல். அடுத்தநாள்—ஐப்பசி 31—ஹங்கேரியுடன் இதுபற்றிப்பேச ஒப்புக்கொண்டார் சோவியற் முதல்உதவிப்பிரதமர் மிக்கோயன். ஆனல், அதேதினமே ரூஷியதாங்கிகள் ஹங்கேரியை நோக்கி விரைந்துகொண்டிருந்தன.

இம்மாதம் 3-ந் தேதியன்று இரு ஹங்கேரியதளபதிகள் சோவியற்இராணுவம் திரும்பவும் அழைக்கப்படுவதுகுறித்துச் சோவியற் தலைவருடன் பேசப்போனர்கள். இந்தத்தலைவர்கள் இப்பொழுது எங்கு இருக்கிறார்களோ தெரியவில்லை. இது ஒரு மர்மம். இம்மாதம் 4-ந்தேதிகாலை சோவியற்தலைவர்கள் ஹங்கேரிய தேசாபிமானிகளைப் படுகொலைசெய்யப் படைகளைஏவிவிட்டார்கள்.

வீரசுதந்திரம்வேண்டி ஹங்கேரிய மக்கள்செய்துள்ள தியாகம் ஒப்புவமையற்றது. இது வீண்போகமுடியாது. "சோஷலிஸத்துக்குப் பாதைகள்பல" என்றும், "அமைதியாய்ச் சேர்ந்து வாழ்க" என்றும் சோவியற் தலைவர்கள் சமீபகாலத்தில் கோஷித்துவந்துள்ளார்கள். இது முழுப்பொய்என்பதை ஹங்கேரியமக்களைப் படுகொலைசெய்துள்ள சோவியற் படையெடுப்பானது உலகறிய எடுத்துக்காட்டி விட்டிருக்கிறது. "அமைதியாகச் சேர்ந்து வாழ்க"என்ற சோவியற்கோஷம் மக்கள்படுகொலையாக மாறிவிட்டது.

---

## வன்னித்தபால்

செட்டிகுளம், "சன் கிளப்" செயலாளர் திரு. சி. கே. இலங்கராசா (பி. டபிள்யு. டி.) ஓவசியரால் சிறப்பாக நடாத்தப்பட்டுவந்த இவ்வாண்டுக்குரிய கரபந்தாட்ட விளையாட்டுப்போட்டிகளின் வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டி விழா முதலியாகுளம் "சென் அன்ரனீஸ்" கரபந்தாட்டக்கோஷ்டிக்கும், முல்லைத்தீவு, "ஸ்ரார்" கரபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே சென்ற 18-11-56 ஞாயிறுவாரம் செட்டிகுளம் விளையாட்டுமைதானத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. விளையாட்டைப் பார்த்து ரசிப்பதற்கென்று பலகிராமங்களைச்சேர்ந்தமக்கள் சமுத்திரம்போல மைதானம் முழுவதும் தேங்கியிருந்தார்கள். செட்டிகுளம் ஐக்கியசங்க பரிசோதகர் எஸ். மாட்டீன் அவர்கள் விளையாட்டுப்போட்டி மத்தியஸ்தராகக் கடமை ஆற்றினர். இருகோஷ்டிகளுக்குமிடையே நடைபெற்ற மும்முரமான போட்டியில் முதலியாகுளம் சென் அன்ரனீஸ் கோஷ்டி 2—1 ஆட்டங்களால் முல்லைத்தீவு "ஸ்ரார்" கோஷ்டியைத் தோற்கடித்தது. விளையாட்டுமுடிவில் கிராமமுன்னேற்றசங்க நிலையத்தில் செட்டிகுளம் அரசினர் வைத்தியசாலை அதிகாரி அப்போதிக்கரி ஐ. சங்கரப்பிள்ளை அவர்கள் தலைமையில் வெற்றிக்கிண்ணங்களை வழங்குவதற்காகச் செட்டிகுளம் கட்டளைக்குரவர் வண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியவர்கள் வரவேற்கப்பெற்ருர். போட்டி மத்தியஸ்தராகக் கடமையாற்றிய செட்டிகுளம், ஐக்கியசங்கப் பரிசோதகராலும், முல்லைத்தீவு, "ஸ்ரார்" கோஷ்டித்தலைவர் மரியநாயகம் அவர்களாலும், முதலியாகுளம், சென் அன்ரனீஸ் கோஷ்டித்தலைவர் எம். சி. யோசெவ் எஸ்பீரியர் (முதலியாகுளம் கத்தோலிக்கபாடசாலைத் தலைமைஆசிரியர்) அவர்களாலும் பேச்சுகள்நிகழ்த்தி நன்றியுரை கூறப்பட்டது. ஈற்றில் வண. கட்டளைக்குரவரின் பாராட்டுரையின்பின் வெற்றிபெற்ற முதலியாகுளம் சென் அன்ரனீஸ் கோஷ்டிக்கு வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டதுடன் செட்டிகுளம் வருடாந்த வெற்றிக்கிண்ண விளையாட்டுவிழாவும் இனிதேநிறைவாயிற்று.

வன்னிநூர் ஆசிரியன்

---

● பீடிபுகைப்பது புற்றுநோயை உண்டுபண்ணுகிறதென்று புற்றுநோய் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவருகிறதென்றும், மதுபானத்துக்கும், புற்றுநோய்க்கும் யாதாமோர் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லையென்றும் திரு. வி. ஆர். கனேல்கர் தெரிவிக்கின்ருர்.

*   *   *

● ஐஸ்கிறீம்கள், இனிப்புத் தின்பண்டங்கள் ஆதியவற்றிலே நிறங்கொடுக்கச் சேர்க்கப்படும் வர்ணப்பொருட்கள் புற்றுநோய்க்குக் காரணமாயிருப்பது படமுறைகளிலும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக இந்திய புற்றுநோய் ஆராய்ச்சிநிலையத் தலைவரான திரு. வி. ஆர். கனேல்கர் அவர்கள் மைசூரிலே சென்றதிங்கட்கிழமை நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில் கூறியிருக்கிருர்.

● இஸ்ருயேல்நாடு யாதாமோர் காரணமுமில்லாது எகிப்தைத் தாக்கியதற்காக அதற்கு நஷ்டபரிசாரம் இறுக்கவேண்டுமென்ற ரூஷியாவின் கேள்வியை இஸ்ருயேலின்பிரதமரான திரு. டேவிட் பென் கூறியன் நிராகரித்து விட்டிருக்கிருர். எகிப்துஅல்ல இஸ்ருயேலே நஷ்டபரிகாரம் பெறவேண்டிய உரிமையுடையதென்றும் அவர் தெரிவித்திருக்கின்ருர்.

*   *   *

● இரண்டாவது உலகயுத்தம்முடிந்ததுமுதல் யுத்தத்தாலே பாழடைந்த நாடுகளுக்கும், புதிதாக அபிவிர்த்தி பெற்றுவரும் நாடுகளுக்குமாக ஐக்கிய அமெரிக்கதேசம் 52 லட்சகோடி டலருக்குமேல் வழங்கியிருக்கிறது. இந்தப் பணம் உலகத்தைப் பிரதமஇராசவீதிகள்வழியாக இருமுறை வட்டமிட்டுச் சுற்றிவரக்கூடிய அத்தனை பெருந்தொகையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானோபதேசப் பாடத்திட்டம்

| | கீழ்ப்பிரிவு | மேற்பிரிவு | 2-ம் வகுப்பு | 3-ம் வகுப்பு | 4-ம் வகுப்பு | 5-ம் வகுப்பு | 6-ம் வகுப்பு | 7-ம் வகுப்பு | 8-ம் வகுப்பு | G. C. E. ஆயத்தவகு. | G. C. E. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செபங்கள் | சிலுவையடையாளம்<br>அர்ச். சிலுவை மந்திரம்<br>பர. பிரி. மந்திரம்<br>அர்ச். தமதிரித்துவ ஸ்தோத்திரம் | விசுவாசமந்திரம்<br>பாத்திமாமாதாகற்பித்த செபம் | பாவசங். மந்திரம்<br>உத்.பன. மந்திரம்<br>அசனத்திற்கு முன் பின் செபங்கள்<br>காவற்சம்மனசானவருக்குச் செபம் | காலே மாலே செபம்<br>திரிகாலச் செபம்<br>தேவமாதா அடைக்கலச் செபம்<br>சுருக்கமான காரணிக்கங்கள்<br>மகாமதுரம்பொருந்திய | சின்னக் குறிப்பிடச் சகல செபங்களும் | செபமாலைக் காரணிக்கங்கள் | அர்ச். சூசையப்பர் அடைக்கலச் செபம் | | | அரசாங்க பாடத்திட்டம் | |
| போதகம் | ஒரே சருவேசுரன்<br>மூன்று ஆட்கள்<br>இரண்டாமாளின் மனிதாவதாரம் | விசுவாசமந்திரத்தின் சுருக்கமான விளக்கம் | பாலர் குறிப்பிடம்<br>I. 1—6<br>II. 1—3<br>III. 8, 6 | பாலர் குறிப்பிடம் முழுவதும் | சின்னக் குறிப்பிடம்<br>I. 1—12<br>II. 1, 2, 3 | சின்னக் குறிப்பிடம்<br>II, 4—12<br>III. 1—11 | பெரிய குறிப்பிடம் முதலாம் காண்டம் | பெரிய குறிப்பிடம் இரண்டாம் காண்டம் | பெரிய குறிப்பிடம் மூன்றும் காண்டம் | | |
| வேதாகமம் | | | | | * வேதாகம சங்ஷேபம் பழைய ஏற்பாடு (பதிப்பு : திருச்சி) | * வேதாகம சங்ஷேபம் புதிய ஏற்பாடு (பதிப்பு : திருச்சி) | * வேதாகம சரித்திரம் பழைய வேதம் (பதிப்பு : சென்னை) | * வேதாகம சரித்திரம் புதியவேதம் (பதிப்பு : சென்னை) | அப்போஸ்தலர் நடபடிகள் 1—13 அதி. | | |
| பக்திச்சபைகள் | | | | திருப்பாலர் சபை | செப அப்போஸ்தலர் சபை | வேதப்பரப்புதல் சபை | தேவமாதாவின் பக்திச்சபைகள் | திரு இருதய பக்திச் சபைகள்<br>கிறிஸ்தவபோதகப் பக்திச்சபை<br>நற்கருணைப் பக்திச் சபை | மரியாயின் சேனை<br>சென் வின்சென்ற் டி போல் சபை | | |
| கீர்த்தனங்கள் | 1. அன்புருவாய் எம் நடுவில்<br>2. யேசு நேசிக்கிறார்<br>3. மதுரமான யேசுவே<br>4. யேசுவே எழுந்தருளுவீர்<br>5. ஏற்பிரம்மா தாயே<br>6. கெட்டுப்போனேம் பாவியானேம் | | | 1. இஸ்பிரீத்து சாந்துவே வாரும்<br>2. சீவபலியான<br>3. யேசுவே அரிய உலகரட்சகரே<br>4. வாரும் நேச யேசுவே<br>5. யேசுநாமத்தைச் சொன்னலே<br>6. யேசுநாதருக்கே ஸ்தோத்திரம்<br>7. அருளின் சுனையே<br>8. அலைகடலொளிர்<br>9. வந்தோம் உம்மைநாட் கூடி<br>10. வாழ்க, வாழ்க, வாழ்க மரியே<br>11. திருச்செபமாலை ராக்கினியே<br>12. மாசில்லாம லுற்பவித்த தேவமாதாவே<br>13. அம்மா, அம்மா ஆதரி எனை | | | 1. ஓ சலுத்தாறிஸ்<br>2. தாந்தும் ஏர்கோ<br>3. கிறிஸ்துஸ் லின்சிற்<br>4. யேசுராசாவே<br>5. தேவசற்பிரசாதமே<br>6. சுவாமி தயைகூர்ந் தெழுந்தே வருவீர்<br>7. வானோர் போசனமே<br>8. பரிசுத்த பரம நற்கருணைக்கு<br>9. அருமருந் தொன்றுண்டு<br>10. தேவாக்கினி சுவாலை விட்டொளிர்<br>11. கிருபை செய்யும்<br>12. பொறுதி தாரும்<br>13. தூண்டும் கேசத்தாலே வெந்து<br>14. யேசுவின் தயாள அன்பை<br>15. "என்பலி" என்ற புத்தகத்தில் உள்ள பாட்[illegible] | | 16. சென்ம மாசற்பமேனும் இல்லா<br>17. ஓ அன்னையே<br>18. தாயே நான் பிள்ளையல்லவோ<br>19. அம்மா என் நேசத்தாயே<br>20. மருதமடு மாதாவே<br>21. தாயே உன்பாதம் தஞ்சம் என்று ஓடி வந்தோம்<br>22. தினமும் வாழ்த்துவோம்<br>23. வானவர் புடைசூழ<br>24. எங்கள் காவலாம் சூசை தாதையின்<br>25. நான் கிறிஸ்தவன்<br>26. கர்த்தரின் படைப்புகள் அனைத்துமே<br>27. ஒருவெண் கொற்றக் குடைநிழலில் | | |
| வேதப்பயிற்சி | பாலக யேசுவுக்குப் பூவைத்தல்<br>கோவிலில் பத்தியாக இருத்தல் | பூச்செண்டுகட்டிச் சுருபங்களுக்கு வைத்தல்<br>திவ்விய சற்பிரசாதநாதருக்கு முழந்தாள் மடித்து ஆசாரஞ் செய்தல் | பத்தியாய்த் திவ்வியபூசைகாணுதல்<br>ஞாயிற்றுக்கிழமைச் சற்பிரசாத ஆசீர்வாதத்தில்பங்குபற்றுதல் | நாளாந்த கிரியைகளை ஒப்புக்கொடுத்தல்<br>தனியே தேவநற்கருணை சந்தித்தல் | செப அப்போஸ்தலர் சபையிற் சேருதல்<br>நாளாந்தம் வீட்டிற் செபமாலை சொல்லுதல் | வணக்கமாசம் கோவில் திருநாட்களில் கோவில் சோடிப்பில் கலந்து கொள்ளல்<br>தேவநற்கருணையை அடிக்கடி பத்தியோடு பெறுதல் | விசுவாச, நம்பிக்கை, தேவசிநேக முயற்சிகள் அடிக்கடி செய்தல் | பிறர்சிநேக நற்கிரியைகள் அடிக்கடி செய்யத் தெண்டித்தல் | அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்தல்<br>நாட் பூசையிற் பத்தியோடு பங்குபற்றல்<br>கத்தோலிக்க சேவையைச் சார்ந்த சபைகளில் சேருதல் | | |

குறிப்புகள் :
1. இப்பாடத்திட்டத்தின் முதல் நான்கு பிரிவுகள் மாத்திரமே போட்டிப் பரீட்சைக்குரியவைகள்.
2. 4-ம் வகுப்புக்கும், அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கும் மாத்திரமே எழுத்துமுறையில் பரீட்சை நடாத்தப்படும்.
3. * இவ்வடையாளத்தால் குறிக்கப்பட்டுள்ள புத்தகங்களை மாணவர் வைத்திருத்தல் அவசியமன்று.
4. 1957-ம் ஆண்டு தைமீ தொடக்கம் இப்பாடத்திட்டம் அனுசரிக்கப்படல் வேண்டும்.

Approved :
✠ J. EMILIANUSPILLAI, O. M. I.
Bishop of Jaffna.
14-11-56.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TENDER NOTICE

### Jaffna Municipal Council

**Lease of "Markets" and "Gala Including Bus Stand" 1957**

Sealed Tenders on prescribed forms obtainable from the Municipal Office, Jaffna, will be received by the Municipal Commissioner, Jaffna, for the lease of the undermentioned "Markets" and "Gala including Bus Stand" up to 4-30 p. m. on 3-12-56.

Tender forms will be issued up to 3 p. m. on 3-12-56.

| | Name of Markets etc. and Gala Including Bus Stand | Tender deposit payable to obtain Tender Forms | Fees payable before obtaining Tender forms for Notarial Bonds |
|---|---|---|---|
| | | R. C. | R. C. |
| 1. | Grand Bazaar Vegetable Market ... | 500-00 | 150-00 |
| 2. | Grand Bazaar Fish Market ... | 250-00 | 150-00 |
| 3. | Small Bazaar ... | 250-00 | 150-00 |
| 4. | Sengunthar Market | 250-00 | 150-00 |
| 5. | Arialai Market ... | 50-00 | — |
| 6. | Muthirai Santhai ... | 50-00 | — |
| 7. | Columbuthurai ... | 50-00 | — |
| 8. | Navanthurai ... | 50-00 | — |
| 9. | Passaiyoor ... | 50-00 | — |
| 10. | Nallore Market ... | 50-00 | — |
| 11. | Gala Including Bus Stand ... | 500-00 | 150-00 |

Further particulars will be furnished on application in writing to the undersigned.

A. V. CHINNIAH,
Municipal Commissioner,
Jaffna.

Municipal Office,
Jaffna, Nov. 16, 1956.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 355**

சின்னத்தம்பி வேலுப்பிள்ளை கந்தையா, இடைப்பிட்டி, காரைநகர்கிழக்கு, காரைநகர் — வழக்காளி.

1. நாகலிங்கம்சோமசுந்தரம், காமினி படமாளிகை, மருதானை.

2. பெண் புஷ்பராசமணி, No. 28, St. Anne's Lane, சுண்டிக்குளி யாழ்ப்பாணம் — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 355-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1957-ம்ஆண்டு தைமாதம் எட்டாந்திகதி (8-1-57) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 5,683/ உம். இதில் ரூபா 5,000/ க்கு 13-7-55 தொடக்கம் 3-11-55 வரைக்கும் 100-க்கு 12 வீதவட்டியும், பின்தீர்வைக் கூட்டுத்தொகையில் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபா 259/95 சதமும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளிக் கோவிற்பற்று, சிவியாதெருஇறை "நறுவிலடிவளவும்." நறுவிலடி நில. பர. 16-இல் கிழக்குப்புறமாகக் குறிக்கப்பட்ட காணியில் பிரிக்கபபட்ட நில. பர. பத்தும் (நில. பர. 10), வீடு முழுவதும், போட்டிக்கோவும், குசினியும், கிணறும். எல்லை: கிழக்கு — சிற்றம்பலம் இராசரத்தினத்தின் ஆதனம். வடக்கு — கொழும்புத்துறை தண்டாதிபாணி கோவிலின் ஆதனமும், ஒழுங்கையும்' தெற்கு-

---

செல்லப்பா கனகரத்தினத்தின் ஆதனம். மேற்கு — செல்லப்பா அருளானந்தத்தின் ஆதனம்.

முற்பதிப்பு D 229/227

தா. செல்லையா,
கொமிஷனர்

No. 37, Colombogam Road,
Chundikuli, Jaffna

---

## புத்திமதிசொல்லுகிறர்

"எனது சகோதர பிரதிநிதிகளுக்கு (எம். பி. கள்) ஒருசிறிதுபுத்திமதிசொல்லப்போகிறேன்; நெடுநாளைக்குமுன்னதாக வீழ்ச்சியடைந்துள்ள யு. என். பி. அரசாங்கத்தை இந்தப்பூலோகத்தில் அவர்கள் ஏன் கண்டனஞ்செய்துகொண்டு போகவேண்டும்? அப்படியாக இறந்துபட்டபிறகு அதனை இப்படியெல்லாம் கண்டனஞ்செய்து அவர்கள் தங்கள்நேரத்தை வீணுகச் செலவிடுவதற்குப்பதில், பொதுசனங்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்காகத் தங்கள் சக்தியைச் செலவிடவேண்டும்" என்று நாவலப்பிட்டி எம். பி. திரு. ஆர். ஈ. ஜயதிலக சென்றவெள்ளிக்கிழமை அங்குள்ள கதிரேசன்கல்லூரியில் நிகழ்ந்த ஓர்கூட்டத்தில் பேசியிருக்கிறர். இரும்புத்திரைநாடுகளிலே நான்கு மாதகாலம் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டுத் திரும்பியஇவர் கம்யூனிஸ்தநாடுகள்பற்றிப் பேசியபோது: ருஷியாவில் பேச்சுச்சுதந்திரம் இல்லை; இன்றும் அரசாங்கத்தைக் கண்டனஞ்செய்துஆட்சேபிக்க மக்கள் அனுமதிக்கப்படுவதில்லைஎனக்கூறலாயினர். எகிப்திய நெருக்கடிவிஷயமாய் அவர்பேசியவிடத்து, உலகத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கச் சர்வதேச பொலிஸ்பட்டாளம் ஒருபோதுமே துணைச்செய்யப் போவதில்லை; அது கருமங்களை இன்னும்மிகமோசமாகவே ஆக்கிவிடும்; உலகம் வேண்டியிருப்பது யாதெனில், தங்களை ஓர் நாட்டின் மக்களாகஅல்ல, ஆனல், உலகமக்களாகக் கருதுகின்ற தனிப்பட்ட தொண்டர்களைக்கொண்ட ஓர் பொலிஸ்பட்டாளமே; மேலும் சாம்பிராச்சியத்துடன் இலங்கை கொண்டுள்ளதொடர்பை நீக்கிக்கொள்ள வேண்டுமென்ற யோசனையானது இலங்கையின் வர்த்தகத்தைப் பங்கப்படுத்துவதான குறுகியநோக்குடைய ஓர் கொள்கையாகுமெனக் கூறிநின்றுர்.

## இளைஞரின் பரிதாபமரணம்

கச்சாயைச்சேர்ந்த சின்னப்பொடி வல்லிபுரம்என்னும் வாலிபர் சென்ற வெள்ளிக்கிழமை கொடிகாமப் புகைரத நிலையததிலிருந்து சுமார் நூறு யாருக்கப்பால் ஓர் புகையிரதத்தினுல் மோதுண்டு மரணமாயினர். ஓர்வான் சாரதியான இவர் அன்றுபிற்பகல்2-30 மணியளவில் கொடிகாமச் சந்தையிலிருந்து கச்சாய்க்குச்செல்லுந்தெருவிலே புகைரதப்பாதையைக் கடக்கும்பொழுது, பளையைநோக்கிப் புறப்பட்ட புகைரதத்தினுல் இடறுண்டு, அதன்சில்லுக்குள் அகப்பட்டுச் சுமார் நூறுயார்தூரம்வரை இழுத்துச்செல்லப்பட்டார். இவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்படும்போது வழியில் இறந்துபோயினர்.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகரசபை

### சந்தைகளுக்கும், பஸ்நிலையத்தை உள்ளடக்கிய காலைக்குமான குத்தகை — 1957

கீழ்வரும் சந்தைகளுக்கும், பஸ்நிலையத்தை உள்ளடக்கிய காலைக்குமான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபைக் கொமிஷனரால் 3-12-56-ந் திகதி பிற்பகல் 4-30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபைக் கந்தோரில் இருந்து பெறக்கூடிய மாதிரிப்பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 3-12-56-ந் திகதி பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படும்.

| | சந்தைகள், பஸ்நிலையத்தை உள்ளடக்கிய காலை முதலியவற்றின் பெயர் | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய பொறுப்புப் பணம் | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரீஸ் உறுதிக்காகச் செலுத்தப்படவேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| 1. | பெரியகடை மரக்கறிச் சந்தை | 500-00 ... | ... 150-00 |
| 2. | பெரியகடை மீன்சந்தை | 250-00 ... | ... 150-00 |
| 3. | சின்னக்கடை மீன்சந்தை | 250-00 ... | ... 150-00 |
| 4. | செங்குந்தர் சந்தை | 250-00 ... | ... 150-00 |
| 5. | அரியாலைச் சந்தை | 50-00 ... | ... — — |
| 6. | முத்திரைச் சந்தை | 50-00 ... | ... — — |
| 7. | கொழும்புத்துறைச் சந்தை | 50-00 ... | ... — — |
| 8. | நாவாந்துறைச் சந்தை | 50-00 ... | ... — — |
| 9. | பாஷையூர்ச் சந்தை | 50-00 ... | ... — — |
| 10. | நல்லூர்ச் சந்தை | 50-00 ... | ... — — |
| 11. | பஸ்நிலையத்தை உள்ளடக்கிய காலை | 500-00 ... | ... 150-00 |

இதர விபரங்கள் கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்துமூலம் விண்ணப்பித்து அறியலாம்.

மாநகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்,
16-11-56.

ஆ. வ. சின்னையா,
மாநகரசபைக் கொமிஷனர்,
யாழ்ப்பாணம், இ.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 462**

உரும்பிராய்
கந்தையா இரத்தினசபாபதி
— வழக்காளி.

எதிராக
கொக்குவில் கிழக்கு
சிந்தன் சின்னத்தம்பியும்,
கோண்டாவில்
பண்டாரி பொன்னனும்
— எதிராளிகள்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 2549/40-ம் இதற்குத் தீர்வைத் திகதிதொடக்கம் 1500-க்கு 7 வீதவட்டி 30-8-55 தொடக்கம் 7-2-56 வரைக்கும. அதன்மேல் முழுத்தொகைக்கும் 7-2-56 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 211/60-உம்.

யாழ்ப்பாணம், டிஸ்திறிக்கோட்டின் M. B. 462-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1956-ம்ஆண்டு மார்கழிமாதம் 13-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெருஇறை "மடப்புண்ணியா தூக்குவிட்டவளவும், மணபுலிஆருச்சிவயலும்." பர. நெ. இலா. 27. எல்லை: கிழக்கு — சங்கரப்பிள்ளை கந்தையாவும், பங்காளருக்கும் உடைய ஆதனம். வடக்கு — விஞசித்தம்பி ஆறுமுகத்தின் ஆதனம். மேற்கு — ரோட்டு. தெற்கு — வேலாயுதர் கந்தையாவின் ஆதனம் (மடமும், கிணறும் உட்பட).

* * *

இருதுண்டுக்காணிகள் 1956-ம்ஆண்டு மார்கழிமாதம் 14-ந்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

1. நல்லூர்க்கோவிற்பற்று, கொக்குவில்இறை "இரட்டன்காலி." பர. நிலை. இலா. $24\frac{3}{8}$. எல்லை: கிழக்கு — சின்னத்தம்பி ஆறுப்பிள்ளையின் ஆதனம். வடக்கு — கார்த்திகேசு சுப்பிரமணியமும், பங்காளருடையவும் ஆதனம். மேற்கு — அம்பலவாணர் சினியின் ஆதனம். தெற்கு — பண்டாரம் கந்தரும், பங்காளருடையவும் ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் நாலில் ஒருபங்கும், புதுக்கிணற்றில் $\frac{1}{4}$ பங்கும்.

2. ஷெஇறை இரட்டன்காலி. பர. நிலை. இலா. $24\frac{3}{8}$. கிணற்றுப்பங்கும். எல்லை: கிழக்கு — தம்பிப்பிள்ளை இராசையாவின் ஆதனம். வடக்கு — கார்த்திகேசு சுப்பிரமணியத்தின் ஆதனம். மேற்கு — இராசையாபெண் சின்னம்மாவின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை. இதடங்கலிற் சொரியலாய் 8 பரப்பு.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்

51, 4-ம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
25-10-56

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 22-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித வீரர்



## வெள்ளிச் செபமாலை

கென்றட் பாலப் பிராயம் கடந்து வாலிப தசை அடைந்தான். அவனது அருமைத் தந்தை தனது பிரிய மனையாளையும் அரிய புதல்வனையும் விட்டுப் பரமபதமடைந்து பல ஆண்டுகளாயின. அவரது ஏராளமான திரவியமனைத்தும் கென்றட் வசமானது. தங்கள் சம்பத்தின் பெரும்பாகத்தை ஏழைகள் சுகிப்பதைக் கண்டு தாயும் மகனும் ஆனந்தமடைந்தனர்.

உத்தம கத்தோலிக்கனுக வளர்க்கப்பட்ட கென்றட் உயர்தர படிப்பின் பொருட்டுலண்டன் நகர்செல்லவேண்டியதாயிற்று. தனதுஏக அரியபுதல்வனை—தனது பிரிய கன்றைப் பிரிவது தாய்க்குச் சொல்ல முடியாத சஞ்சலத்தை வருவித்த போதிலும், மகனின் உயர்ச்சியைக் கருதிய தாய் மகனின் பிரிவைச் சகிக்க முன்வந்தனள்.

மகனை வழியனுப்ப எல்லா ஒழுங்குகளையும் செய்து முடித்த தாய், கடைசிவிசையாக மகனை அரவணை[illegible] அன்பின் முத்தம் ஈந்தபின்னர் ஓர் அழகிய வெள்ளிச் செபமாலையை அவன்கையில் கொடுத்து, ''என் நேசமகனே! இச் செபமாலையை உனது வெற்றியின் சின்னமாக வைத்துக்கொள். இது எப்போதும் உன்னுடனேயே இருக்கக்கடவது. சீவியத்திலும் மரணத்திலும் உனது உற்ற துணை இதுவா யிருக்கட்டும். உன்னை அன்புடன் காக்கும் உனது நேச அன்னை தேவதாயை மறவாதே'' என்று புத்தி கூறி மீண்டும் ஒரு முறை தன் மகனை அன்புடன் முத்தமிட்டாள்.

தனது தாயின் புத்தியைச் சிரமேற்கொண்ட கென்றட், சொகுசான கடல் யாத்திரையின் பின்னர் சுகமே லண்டன் நகர்போய்ச் சேர்ந்தனன். முன்னரே தன் தாய் ஒழுங்கு செய்துவைத்த விடுதியாகிய பெயிற்றன் துரையின் இல்லத்தை அடைந்தனன். பெயிற்றன் தம்பதிகள் கென்றட் துரைமகனை அன்புடன் வரவேற்று இராவிருந்தளித்துபசரித்தனர்.

பெயிற்றன் தம்பதிகளுக்குப் பிள்ளைகள் இல்லை. எனவே, கென்றட் துரை மகனைத் தங்கள் மகனெனவே மதித்தனர். இளைஞனும் பெயிற்றன் தம்பதிகளைத் தனது அன்னை தந்தையர் என மதித்தனன். பெயிற்றன் துரையின் ஓர் மைத்துனனும் இவ்வில்லத்திலேயே வசித்தனன். றெனி என்னும் பெயருடைய இவ் வாலிபன் குரூரகுணம் படைத்தவன். தெய்வ பயமற்றவன். பெயிற்றன் துரையைக் கொன்றுவிட்டு அவரது திரவியங்களை அபகரிக்கச் சமயம் தேடி நின்றனன். இதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன், தான் காதலித்திருந்த லூசின என்னும் பெண்ணுக்கும் தெரிவித்திருந்தான். பணவாஞ்சை பிடித்த லூசினவும் அவனுக்குத் தைரியமளித்து வந்தாள். ஆனால், பெயிற்றன் தம்பதிகளோ, கென்றட் துரைமகனே இதைக் குறித்து யாதும் அறியாதிருந்தனர்.

பெயிற்றன் துரை வேட்டையாடுவதில் விருப்புடையவர். தினமும் கந்தோரி விருந்து வீடுதிரும்பியபின் தமது இல்லத்திற்குச் சற்றுத் தூரத்திலுள்ள காட்டிற்கு வேட்டையாடச் செல்வது வழக்கம். சில சமயம் கென்றட்டையும் அழைத்துச் செல்வதுமுண்டு. ஒரு நாள் தேநீர் அருந்தியபின் இருவருமாக வேட்டைக்குப் புறப்பட்டனர்.

முன்னரே தான் ஒழுங்கு செய்தபடி றெனியும் வேறு வழியாக இந்தக் காட்டையடைந்தான். பெயிற்றன் துரையும், கென்றட் இளைஞனும் வரும் வரையும் அங்குமறைந்திருந்தான். இதையறியாத வேட்டைவீரரிருவரும் உல்லாசமாகப் பேசிக்கொண்டு காட்டில் அங்குமிங்கும் சுற்றித் திரிந்தனர். ஈற்றில் ஒரு முயலைக் கண்ட பெயிற்றன் பிரபு அதைச்சுடும்படி கென்றட்டை ஏவினர். அவனும் துப்பாக்கியை நீட்டினது தான் தாமதம், பயங்கரமான ஒருவெடிச் சப்தம் கேட்டது. உடனே பெயிற்றன் துரை பயங்கரமாகக் குளறிக்கொண்டு நெஞ்சில் இருந்து இரத்தம் பெருகக் கீழே விழுந்து இறந்தார். கென்றட் தன் கையிலிருந்த துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டுத் தான் அருமையாக நேசித்த தந்தையின் சமீபத்தில் முழந்தாளிலிருந்து செபித்தபின் அதற்கப்பால் செய்வதென்னவென்று அறியாமல் எழுந்தான். இரத்தம் தோய்ந்த உடையுடன் துப்பாக்கியைக் கையிற் கொண்டு கொலையாளியைத் தேடப்புறப்பட்டான். கிற்க,

வெடிச் சப்தத்தோடே கேட்ட பிரலாபத் தொனியைச் செவியுற்றவர்கள் விஷயத்தை அறியும்படியாகச் சப்தம் வந்த திசையை நோக்கி ஒருவர்பின் ஒருவராய் ஓடிவந்தனர். ஆ! அவர்கள் அங்குகண்டதென்ன? பெயிற்றன் பிரபு மார்பில் சுடப்பட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து, கிடப்பதையும் கென்றட் இரத்தந் தோய்ந்த உடையுடனும், கையிற் துப்பாக்கியுடனும் அங்குமிங்கும் சுற்றியோடுவதையுங் கண்டனர். பொலிஸ்காரரும் உடனே வருவிக்கப்பட்டனர். சந்தேகம் ஏதும் இன்றிப் பெயிற்றன் பிரபுவைக் கொன்றவன் இவனே என்று கென்றட் விலங்கிடப்பட்டான்.

பொலிஸ்பாதுகாப்புடன் பெயிற்றன் துரை இறந்து கிடந்த இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட கென்றட் குழந்தைப்பிள்ளை போல் அழத் தொடங்கினன். தந்தைபோலத் தன்னை நேசித்த பிரபு இறந்து கிடக்கும் காட்சி ஒரு பக்கம்—தான் விலங்கிடப் பட்டிருக்கும் நிர்ப்பாக்கிய ஸ்திதி மறு பக்கம் — திருட்டுத் தனமாகக் கண்ணீர் விடுகிறான் என்று பழிக்கும் அவமானம் மற்றோர் பக்கம். தன்னை வருத்தச் செய்வதென்ன வென்று அறியாமல், மனதில் அருமையாகத் தான்நேசிக்கும் தேவ அன்னையையே தியானித்துக் கொண்டிருந்தான். தன் தாயின் தனிமையையும், அவளின் அன்பையும் எண்ணி அங்கலாய்த்தான். பொலிஸ் உத்தியோகஸ்தரின் ஒவ்வொரு வினவுக்கும் கென்றட் திட்டமான பதில் கூறியதிலிருந்து அவன் குற்றமற்றவன் என்று தோன்றிய போதிலும் குற்றவாளி அவனே என்றுஎல்லோரும்குரவைமிட்டனர். ஈற்றில் கொலைக் குற்றவாளி வேஷத்துடன் கென்றட் சிறைக் கூடத்தை அடைய வேண்டியதாயிற்று.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா சொல்லுவது

அருமைச் சகோதரங்களே!

பிறேசில்நாட்டுக் கடற்படை மாணவருக்கு எமது பரிசுத்த பிதா பேட்டியளித்தபொழுது, "பயமோ, குறைபாடோ இல்லாமல், நல்ல கத்தோலிக்கனாக நடந்துகொள்ளுகிற தரைப்படை, கடற்படை வீரனே தான் சுயநாட்டின் உத்தம சேவகனாக இருப்பான்" என்று கூறினார்.

"கடற்படை அமைப்புத் தற்காலம் அதிகந் திருந்திவிட்டது. ஆனால், செபம் பண்ணும் விதமறிய வேணுமென்றால் சமுத்திரத்தைப் பார்க்கவேண்டும்: அங்கு சிருட்டிகரின் திகிலுறுத்தும் வல்லமையைக் காட்டும் புத்தகம் விசாலத் திறந்துகிடக்கிறது" என்றார்.

உங்களன்புள்ள,
அண்ணா.

---

## முயற்சி

"முயற்சி உயர்ச்சிதரும்"

"முயற்சி திருவினை ஆக்கும்"

"ஆழமுயன்றால் ஆகாததில்லை"

"முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்"

"முயற்சியே பெரும் பாக்கியம்"

"முயல்க, முயல்க, திரும்பவும் முயல்க"

"விடாமுயற்சி வெற்றிதரும்"

"குன்றாஉழைப்பும், குறையாமுயற்சியும், என்றும் எதையும் சாதிக்கும்"

சோம்பேறிகளின்பாதையில் தடைக்கல்லாயிருப்பது, முயற்சி உள்ளவர்களின் பாதையில் படிக்கல்லாயிருக்கும்"

"முயற்சி உள்ளவன் முன்னேறுவான்"

## ஒரு நண்பன் போல

சொற்ப நாட்களுக்குமுன் மனந்திரும்பிய ஒருவரைச் சந்தித்தேன். தான் சத்தியவேதத்தில் சேர்ந்ததை யிட்டும், தேவன் தமக்குஅளித்த வரங்களையிட்டும் மிகவும் சந்தோஷப் பட்டார். அவர் மனந்திரும்புவதற்குப் பல காரணங்களுண்டு. அவைகளில் விசேடமானது ஒன்று.

அவர் சொன்னதாவது: நான் ஒரு நாள் என் நண்பனுடன் ஓர் கத்தோலிக்க ஆலயத்துக்குச் சென்றேன். சென்று ஓர்இடத்தில் உட்கார்ந்தேன். சிறுவர்பலர் அக்கோவிலுக்கு வந்தார்கள். அமைதியாய் ஆசிநீரைத்தொட்டுச் சிலுவையடையாள மிட்டார்கள். பின்பு மூவர் சற்பிரசாதக் கிருதியண்டைபோய் முழந்தாளிட்டார்கள். அவர்களுடைய தலை குனிந்து நிமிர்ந்ததிலிருந்தும், சாவதானமாய் இருந்ததைக் கண்டும் ஏதோ பெரிய ஆலோசனை செய்பவர்போலக் காணப்பட்டனர். ஆனால், அவர்களைக் கூர்ந்து கவனித்தவிடத்து, அவர்கள் கதைக்கவில்லை, செபித்துக்கொண்டிருந்தனரெனக் கண்டேன். தேவநற்கருணைப் பேழையில் இருக்கிறவருடன் கதைத்தார்கள். அப்பிள்ளைகள் கடவுள் தங்கள் நண்பர்என நடந்துகொண்டார்கள்.

தம்பி, தங்கைமார்களே, நீங்கள் தேவனுடைய ஆலயத்துக்குள் போனால் என்னவிதமாய் நடந்து கொள்ளுகிறீர்கள்? சிநேகிதன் வீட்டிலிருப்பதுபோல நடக்கிறீர்களா? ஆசிநீரை அள்ளிக் கீழே இறையாமல், தொட்டுச் சிலுவை அடையாளம் இடுகிறீர்களா? முழந்தாள் மடிக்கும்போது, தம்மைச்சந்திக்க வந்திருக்கும் யேசு உங்களைக் கவனிக்கிறாரென்று நினைக்கிறீர்களா?

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாலிபரின் பாதுகாவலர்

போலாந்துதேச இராசப் பிரபுகுலத்தில் பிறந்த பிள்ளைஒருவன் இருந்தான். சிறுவத்திலிருந்தே பக்திவிசுவாச முள்ளவன். இவ்வுலக பொருட்களை விழலென்றெண்ணி அலட்சியம் செய்தவன். 15 பிராயமானதும், தனது சொத்துச் சுதந்திரங்கள் யாவற்றையும் துறந்து சந்நியாச சபையில் தரித்திரசீவியம் சீவிக்க நேர்ந்துகொண்டான். இதனையறிந்த பிரபுகுலவாலிபநண்பர்சிலர் அவனிடம்சென்று: "தம்பி, நீ இராசபிரபு குலத்தில் உதித்தவன்; அதோபார், உனக்குச் சொந்தமான மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், கண்ணுக் கெட்டாததூரம் அகன்றுவிரிந்து பரந்துகிடக்கும் பூஸ்திதி! திரளான திரவியம்! இவையெல்லாம் உன்னுடையவை. இவ்வளவு சுகபோகங்களை மனங்கொண்டவரை அனுபவித்து இவ்வுலகில் உற்றார் உறவினருடன் சொகுசாய் வாழலாமே" என்றனர். அப்போது இளைஞன்: "நண்பர்காள், வாஸ்தவம்; எனக்கு ஏராளமான சம்பத்து உண்டுதான்; ஆனல், இவ்வுலக பாக்கியங்கள்யாவும் பகட்டானவை, அழிவுக்குரியவை; பரலோக பாக்கியத்துக்குமுன் இவைகளெல்லாம் விழலுக்குச் சமானம்; இவ்வுலகில் நமது நல்லதந்தையாகிய சர்வேசுரனை அறிந்து நேசித்துச் சேவித்து, மறுவுலகில் அவரை நித்தியத்துக்கும் சுகித்து அநுபவிப்பதே மனுஷனுடைய லட்சியம்; இதுவே மானிடசீவியத்தின் மகத்தான பாக்கியம்! நானே இம்மகத்தான சொத்துக்களைச் சுகித்து அநுபவிக்கப் பிறந்தவன்" என்று பதிலிறுத்தான். இந்தப்பையன் தனது 17-ம்பிராயத்தில் தாய்தந்தையர், உற்றார்உறவினர், உலக சுகபோகங்கள் யாவற்றையும் விட்டொழித்து, யேசுசபையில்சேர்ந்து நவசந்நியாசியாகி மோட்சபாக்கியம் பெற்றான். திருச்சபை இந்தஇளைஞனுக்கு அர்ச்சியசிட்ட பட்டமளித்து இவரை வாலிபருக்குப் பாதுகாவலராக நியமித்திருக்கிறது. இந்த அர்ச்சியசிட்ட வாலிபரின் நாமம் ஸ்தனிஸ்லாஸ் கோஸ்ற்கா.

## எது கெட்டித்தனம்?

தன்பிள்ளைகளை இழந்ததினல் மூளை பிசகிய ஒருவன் ஒரு மாடிவீட்டின் கூரையிலிருந்து குதிக்கஎத்தனித்தான். அதைக்கண்ட பொலிசார் அவனைத் தடுக்கப் பலமுயற்சி செய்தனர். கீழே ஓர்வலையைக்கட்டி, அவனுக்குத் தீங்கு வராமல் தடுக்கநினைத்தார்கள். வந்து கூடியசனம் பலவாறாய் அவனைக் கெஞ்சிக் குதிக்கவேண்டாமென்று தடுத்துப் பார்த்தார்கள், பலிக்கவில்லை.

கட்டளைச்சுவாமி அவ்விடம் வந்தார். அவனைக் கூப்பிட்டு, "எந்தமடையனும் மேலிருந்து கீழேகுதிக்கலாம். அது கெட்டித்தனமல்ல நீ கீழே இறங்கிவா நாமிருவரும் கீழேஇருந்து மேலேபாய்ந்து பார்ப்போம்" என்றார்.

சொற்பநேரத்துள் அம்மனிதன்கீழே இறங்கிவர, பொலிசார் அவனைக் கைது செய்தனர்.

---

## பாட்டி வா!

பாட்டி பாட்டி வாவா நீ
பழைய கதைகள் சொல்ல வா.

●

பாக்கு வெற்றிலை துவைத் துன்றன்
பொக்கை வாய்க்குத் தருவேன் வா.

●

ஒளவைக்கிழவி போலே நீ
அழகாய்க் கவிகள் சொல்வாய் வா.

●

கூனிய நம்மறி வோங்கிடவே நீ
கூனிக்கூனி வருவாயே.

— வே. சாமுவேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org